திராவிடநாடு

8—9—60 | வார வெளியீடு | விலை 16 காசு

விடுதலைத் தீ!

[மை. பெருங்கோ]

புகைவான் கிழித்த பொன்னிலவு
புகலும் செய்தி விடுதலையே!
முகையை அவிழ்த்தே இளந்தென்றல்
மொள்ளும் மணமும் விடுதலையே!
வகையாய் வளர இளங்கொடியும்
வெளிச்சம் தேடல் விடுதலையே!
பகைகள் என்று நமக்கில்லை
பிறப்பின் உண்மை விடுதலையே!

பெயல்நீர் மலையில் பொழிந்தாலும்
போகும் விரும்பிக் கடல்நோக்கி!
இயற்கைச் சட்டம் இனிதென்றால்
இயற்கை விழைவே விடுதலைதான்!
அயலார்க் கடிமை நாமல்லோம்
அன்றே சொன்னார் இவ்வுண்மை!
வயலார் சோலை திராவிடத்தீர்
வளர்ப்பீர் இங்கே விடுதலைத் தீ!

தடக்கை நீட்டி இங்கொருவர்
தருக வென்றார் விடுதலையை!
உடனே உணர்ந்து வதைத்தோரும்
வழங்கி விட்ட சான்றில்லை!
அடலே! புயலே! எரிமலையே!
ஆர்க்க வருதல் உரிமையாம்!
கடலாய் ஆற்றல் தோள்புனைவாய்!
கண்ணாய் வளர்ப்பாய் விடுதலைத் தீ!

“பிறைநிலா”

மலர் 19] ஆண்டுச் சந்தா ரூ. 8. (18—9—60) தனிப் பிரதி 16-காசு [இதழ் 1

தேசிய உணர்ச்சி என்பது தானாகத் தோன்றித் துலங்கவேண்டிய ஒன்று. பேசுகின்ற மொழி, வாழுகின்ற முறை இவற்றில் ஒருமைப்பாடு உள்ள மக்கள் ஒருவர்க்கொருவர் கொள்ளும் உறவும் நட்புமே தேசிய உணர்ச்சியாகக் கருதப்படுகின்றன. ஒரு குடும்பத்தினரைப்போல் ஒரே வகையான வாழ்க்கைப் போக்கு மேற்கொண்டு வாழும் கூட்டத்தினரிடையே ஒற்றுமை உண்டாகும். அவ்வொற்றுமை வளர்ந்து பாசமாகி இறுகும். இறுகும் அவ்வுணர்ச்சியே ‘தேசியம்’ என்றழைக்கப்படும். இது ஓரின மக்களிடையே எழுமேயன்றி எவரிடத்தும் தோன்றாது. கண்ணில் காண்போரையெல்லாம் ‘என் இனம் என் நாட்டான்’ என்று பாராட்டிக் கொள்ள இயலாது. அவர்களிடம் பகை பாராட்டவேண்டும் என்பது இல்லை. நட்பாக இருக்கலாம். நெருக்கடி நேரங்களில் கைகொடுத்து உதவலாம்; உதவியைப் பெறலாம். ஆனால் இவ்வுறவுகள் தேசியம் என்று அழைக்கப்படுவது இல்லை. மாலைக்குள் கண்ணுக்குப் புலனாகாமல் மறைந்து நிற்கும் நூல்போல் தேசிய உணர்ச்சி என்பது மக்கள் மனத்திற்குள் குடிகொண்டிருக்கும். அதனை அழிக்கவோ, அறுக்கவோ இயலாது. அதேபோல இல்லாத தொடர்பைப் புதியதாகத் தோற்றுவித்து ‘இது தேசியம்’ என்றும் காட்ட இயலாது.

ஆனால் இந்த அடிப்படை உண்மையினையும் பலர் அடிக்கடி மறந்துவிடுகின்றனர். ஆகவே அவர்கள் தேசியம் என்பதற்கு என்னென்னவோ கூறி இடர்ப்படுகின்றனர். இந்தியா முழுவதும் ஒரே நாடு, இனம், என்று பேசுவோர் வரலாற்று நூலையே தொட்டும் பார்த்திலர் போலும்! இயற்கை அமைப்பில் ஒரு பகுதியில் அமைந்துள்ள இடம் என்பது ஒழிய இந்தியா ஒரு நாடு, ஒரு இனம், என்பதற்கு வேறு சான்றுகள் இல்லை. பல்வேறு இன மக்கள் வாழும் பகுதியாக இது இருந்து வருகின்றது. பேசும் மொழியிலும் பலவகைகள். பழக்க வழக்கங்களிலும் அதேபோலத்தான்; பண்பாட்டிலும் அப்படியே. இந்நிலைதான் நெடுநாள் நிலவியது; இன்றும் உள்ளது.

வெள்ளையர் வரும்வரை ஆட்சித்துறையிலும், இந்திய நிலப்பரப்பு, பல நாடுகளாகத்தான் அமைந்திருந்தது. தனித்தனி அரசுகள் அமைந்திருந்தன. வெள்ளையர் வெற்றிபெற்ற பின்னர் இமயம் முதல் குமரிவரை ஒன்றாக இணைத்துத் தங்கள் ஆணையைச் செலுத்தினர். அரசியல் துறையில் ஒரு நாடு என்று அழைத்தனரேயன்றி வேறு துறைகளில் அல்ல. சமுதாயப் பழக்க வழக்கங்கள் முதலிய துறைகளில் பழையமுறைதான் நீடித்தது.

இந்நிலையில், வெள்ளையரை எதிர்த்து நாட்டில் புரட்சி மூண்டபொழுது, அனைவரும் ஒன்றுபட்டு நின்றனர். குமரிமுனையும் இமயக்கோடும் சேர்ந்து குமுறி எழுந்தன; வங்கமும்குசராத்தும் இணைந்து எழுந்தன. ஊரில் தீப்பிடித்து எரியும்போது ஊரே திரண்டு வந்து மூண்டெழுந்த நெருப்பை அணைப்பதில் ஈடுபடுகின்றது. இரயில்பயணத்தில்எங்கெங்கோ இருந்து வந்து எங்கெங்கோ செல்வோர் அனைவரும் ஒரே இரயிலில் இருக்கின்றனர். அதைப்போல விடுதலைப் போராட்டத்தின்போது வெள்ளையரை எதிர்ப்பவர் அனைவரும் ஒன்று திரண்டு போராடினர். தங்களுக்குள் இருந்த வேறுபாடுகளைப்பற்றிக் கவலைப்படவில்லை. அவர்கள் யாரோ, இவர்கள் யாரோ என்ற எண்ணமே இன்றி அனைவரும் சேர்ந்து அன்னியனை விரட்டுவதில் நாட்டம் செலுத்தினர். அது, அனைவரும் ஒன்று திரண்டிருக்கவேண்டிய நேரம். ஒருவர்க்கொருவர் இருந்த வேறுபாடுகளை மறந்து இணைந்து நிற்க வேண்டிய சூழ்நிலை. நெருப்பு கொழுந்துவிட்டு எரியும்போது, “அடுத்த வீட்டானும் நானும் பேசுவதில்லை. ஆகவே நான் அவனோடு சேர்ந்து பணியாற்றமாட்டேன்” என்று சொல்ல இயலாது. அடுத்த வீட்டானின் பகையைவிட மூண்டெழும் தீ பெரும் பகை. அப்பெரும் பகையை ஒழிக்கும் வேலையில் ஈடுபடும்போது, சிறு பகைகளை ஒடுக்கிக் கொள்ளத்தான் வேண்டும். அதனால்தான் விடுதலைப்போர்க் காலத்தில் இமயமும் குமரியும் ஒன்று என்று பேசப்பட்டது; வலியுறுத்தப்பட்டது. அந்நிலையில் பிரித்துப் பேசுவோர், (உண்மையிலேயே இருந்த பிரிவைப் பற்றி பேசுவோரும்) இகழப்பட்டனர். ‘நாம் அனைவரும் ஒன்று திரண்டு நமது எதிரியை எதிர்ப்போம்’ என்ற குரல் எழுந்தது. அப்போது இருந்த நிலையை ஒட்டி பாரதியாரும் ‘அனைவரும் ஒன்று

ஒன்றுபட்டுப் போராடி வெற்றி பெறுவோம்! என்ற கருத்துக்கள் அமைந்த பாடல்களை இயற்றி உணர்ச்சியுண்டாக்கினர். உறங்கிக் கிடந்தோர் துயில் துறந்து எழுந்திடத்தக்க பாடல்களைத் தந்து ஊக்கினர். 'மன்னும் இமயமலை எங்கள் மலையே' என்று மார் தட்டினர். 'இமயமலைக்கு விடுதலை கோருவதற்கு நீ யார்?' என்று வெள்ளையன் கேட்டால் அதற்கு விடையாக அமையுமாறு 'அதுவும் என்னுடையதுதான்' என்று பாடினர். இந்த நாடு முழுவதும் இங்குள்ளவர்களுக்கு உரியது என்றார். 'அனைவரும் வாரீர் அணிவகுத்து நின்று அன்னியனை விரட்டிடுவோம்' என்று வீர முழக்கம் செய்தார். தெருக்கோடியில் உள்ள வைக்கோற்போரில் தீப் பிடித்து எரிகின்றபோது. அதைக் காணும் நல்லவன் ஒருவன் "ஐயோ நெருப்பு—நெருப்பு" என்று கூக்குரல் எழுப்புவது உண்டல்லவா? "வாருங்கள் அணைப்போம்" என்று அழைப்பது இல்லையா? அந்தக் கூக்குரலும் அழைப்பும்தான் பாரதியார் பாடல்கள்! 'வீர சுதந்திரம் வேண்டி நின்ற' காலத்தில் எழுந்த போர் முழக்கங்கள் அவை. அந்தக் காலத்தில் அவை பொருள் பொதிந்த அறிவுரைகள்.

நெருப்பு நீறானதும் அணைக்க வந்தவர்கள் அனைவரும் அவரவர் இல்லம் செல்லுவர். செல்லவேண்டும். அப்படியில்லாது "இதுவரை நாம் இணைந்து நின்று இந்நெருப்பு அவித்தோம். இனியும் இப்படியே இங்கேயே இருப்போம்" என்று யாரும் சொல்லமாட்டார்கள். அப்படி யாரேனும் சொன்னாலும் கேட்பதற்கு யாரும் இரார். அவரவர்கள் தங்கள் தங்கள் இல்லம் நோக்கிச் செல்லத் தொடங்கியதும் "பார்த்தீர்களா—முன்னே நாம் பிரிந்திருந்தோம் அதனால் நெருப்புப் பிடித்துவிட்டது. அனைவரும் சேர்ந்து அதனை அணைத்தோம். இப்போது நீங்கள் மறுபடியும் பிரிந்து செல்லத் தொடங்குகின்றீர்கள். மறுபடியும் நெருப்புப் பிடித்துக்கொண்டால்..." என்று ஒருவன் பேசுவதாக வைத்துக்கொள்வோம். மற்றவர்கள் அவனைக் கண்டு இரக்கப்படுவரேயன்றி "பேருண்மை புகலும் பெம்மான்" என்று பாராட்டமாட்டார்கள். "பேதையே, எப்போது இணைந்திருக்கவேண்டும், எப்போது பிரிந்திருக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்" என்று சொல்லிச் செல்வர். அதுதான்முறை.

ஒரே இரயிலில் பயணம் செய்தவர்கள் எனினும் அவரவர் செல்லவேண்டிய இடம் வந்ததும் இறங்கிச் செல்லாது "நாம் இதுவரை இருந்தது போலவே இனியும் இருப்போம்" என யாரும் சொல்லமாட்டார்கள். இந்த உண்மையைப் பலர் உணராத காரணத்தினால் தேசியம் என்பதுபற்றித் தவறான கருத்துக்களைக்கொண்டு தாறுமாறாகப் பேசிடக் கேட்கின்றோம். 'இந்தியா ஒரு எஃகுக் கோட்டை; இதைப் பிளக்கவோ பிரிக்கவோ யாரும் முயலல் கூடாது; முடியவும் முடியாது! என்று ஏதேதோ பேசுகின்றனர்.

ஆகவேதான், அவர்கள் தமிழ் நாட்டில்—திராவிடத்தில்—அணை இல்லையே, ஆலை இல்லையே, தொழில் இல்லையே என்றால் 'அதோ பார் அணையை, இதோ பார் உருக்குலை, இங்கே பார் எத்தனை தொழில்வளம்' என்று எங்கெங்கோ இருப்பதையெல்லாம் விரல் நீட்டிச் சுட்டிக் காட்டுகின்றனர். 'அவையெல்லாம் அங்கல்லவா இருக்கின்றன?' என்று கேட்டால் 'எங்கிருந்தால் என்ன?' என்று கேட்டுவிட்டு 'எல்லாம் ஒரே நாடுதான்' என்கின்றனர். எல்லாம் ஒரே நாடாக இருந்த காலம் இன்று இல்லை. இன்று அன்னியர் என்ற நெருப்பு அணைந்திருக்கிறது. நெருப்பு இருந்தபோது நிலவிய நீதியே இன்றும் நிலைக்கவேண்டும் என்பது அறியாமையேயாகும். நீதி—உண்மை—சூழலுக்கும் காலத்திற்கும் ஏற்றாற்போல திருந்தக் கூடியது; திருந்தவேண்டியது. அதைவிட்டு அன்று சொன்னதுதான் இன்றும் என்றால் அதைப் பிடிவாதம் என்றுதான் பெயரிட்டழைக்க வேண்டும். நோய்ப் படுக்கையில், இருக்கும்போது நொய்க்கஞ்சி குடி என்று மருத்துவர் கூறுகின்றார். நோய் நீங்கிய பின்னும் நான் அதையேதான் உண்ணுவேன் என்றால் உடலுக்கு வலு வருவது எப்போது? நோய்க் காலத்தில் நொய்க்கஞ்சி ஏற்றதுதான். ஆனால் எப்பொழுதும் அதையே நம்பினால் என்ன ஆவது? அன்னியனை விரட்டுகின்றபோது 'மன்னும் இமயமலை எங்கள் மலையே'! ஆனால் இன்று அதை 'எங்கள்' மலை என்று சொல்ல இயலாது.

'மன்னும் இமயமலை எங்கள் மலையே' என்பதிலிருந்து இந்த வரி வேறு ஒருவன் முன்பாடிக் காட்ட வேண்டியது என்பது விளங்கவில்லையா? 'மன்னும் இமயமலை நம் மலை' என்று பாரதியார் பாடியுள்ளாரா? வெளி நாட்டானிடம்தான் இது செல்லும்!

வெளியூரில் சந்திக்கும் ஒருவன் 'நீ எந்த ஊர்?' என்று கேட்டால் 'நான் மாத்தூர்' என்று ஒரு ஊரின் பெயரைச் சொல்லலாம். ஆனால் மாத்தூரிலேயே ஒருவன் 'நீ எந்த ஊர்?' என்று கேட்கும்போது நான் 'இன்ன தெரு' என்றுதான் சொல்லவேண்டும். அதைப்போல வெளிநாட்டான் இருந்தபோது 'நாம் அனைவரும் ஒன்று' என்று அவனிடம் சொன்னோம். இன்றும் அதையே, அவன் போன பின்னரும் சொல்கிறோம் என்றால் 'மயக்கம்' தெளியவில்லை என்பதுதான் பொருள். நாடகத்திலே வேடம்போடும் போது "யாரடா நீ என்முன் வந்தவன்?" என்று அரங்கத்திலே கேட்கும் கேள்விக்கு 'நான் தூதுவன், சேவகன்' என்று ஏதோ ஒன்றை விடையாகச் சொல்லலாம். நாடகம் முடிந்த பிறகும் 'நான் தூதுவன்' என்றால் அது நகைப்புக்கே இடமாகும். இன்னும் நாடக மயக்கம் கலையவில்லை என்றே சொல்வர்,

அதைப்போல விடுதலைப்போர் என்ற நாடகம் நடைபெற்றபோது 'நீ யார்' என்றால், 'நான் இந்தியன்' என்று சொன்னது பொருந்தியது. ஆனால் இன்று அந்த நாடகம் முடிந்துவிட்டிருக்கிறது. இப்போதும் 'நான் இந்தியன்' என்ற அதே பல்லவியைப் பாடுவது இன்னும் அந்த மயக்கத்திலிருந்து விடுபடவில்லை என்பதைத்தான் காட்டுகின்றது.

அதனால் அவர்கள் தமிழ்நாடு, மொழி என்று பேசுவோரை ஏசவும் அவர்கள்மீது பாயவும் தயங்கவில்லை. 'நாங்கள் சொல்லும் தேசியத்தை ஒப்புக்கொள்ளாத இவர்கள் துரோகிகள்' என்கின்றனர். துரோகம் எது, தொண்டு எது என்பதை மக்கள் உணர்ந்துகொண்டனர். உணர்ந்ததினால் உண்மைத் தொண்டர்களைப் போற்றி அவர்கள் வழி நின்று, பணியாற்ற முன் வருகின்றனர். நாட்டில் இந்த நிலை வளருவதைக் காணும்போது 'தேசியவாதி'களுக்கு எரிச்சல் மிகுகின்றது. எதையேனும் சொல்லி, எப்படியேனும் தாங்கள் சொல்வதே சரி என நிலைநாட்டிவிடத் துடிக்கின்றனர். அதனால் அவர்கள் "பிரிந்தால் ஆபத்து வரும்" என்று ஏதேதோ சொல்கின்றனர். 'முன்னே நாம் பிரிந்திருந்ததே வெள்ளையன் இடம்பெற வழி செய்துவிட்டது. மீண்டும் பிரிவோமாயின் அந்நியன் வந்து புகுந்துவிடுவான்' என்கின்றனர். 'பற்றி எரிந்த நெருப்பை அனைவரும் சேர்ந்தே அணைத்தோம்—இனி நாம் பிரியக்கூடாது. பிரிந்தால் மீண்டும் நெருப்பு மூண்டால் என்ன செய்வது?' என்று சொல்வது போன்றது இந்த வாதம். நெருப்பு மூளும் மூளும் என மூலைக்கு மூலை திரண்டு நின்றால் மற்ற வேலைகளை எப்போது எப்படி முடிக்க இயலும்? திருடன் வருவான் அவனை விரட்டலாம் என்றே காத்திருக்க இயலுமா? மற்றப் பணிகளையும் கவனிக்க வேண்டும். இடையிலே திடும் எனவரும் ஆபத்தையும் தாங்கித் தடுத்துக்கொள்ளவேண்டும். அதுதான் அறிவுடைமை.

அந்நியனை விரட்ட முன்னே ஒன்று திரண்டோம். இப்போது அவரவர் மாநிலத்தில் அவரவர் உரிமைபெற்று, உழைத்து பிறர் ஏமாற்ற இடம் தராது, பிறரையும் ஏய்க்காது உயரவேண்டும். மீண்டும் பகை வருமாயின் பகை ஒழிக்க அப்போது அணிவகுத்து நிற்க நெடுநேரம் ஆகாது.

உலகம் ஒரு குடும்பம் ஆகவேண்டும் அல்லவா? எனின், ஆகலாம். ஆகும் பக்குவமும் பருவமும் வரும்வரை காத்திருக்கவேண்டும் அல்லவா? பக்குவம் ஏற்படாமுன் எவ்வளவு பாடுபட்டும் என்ன பலனைக் காண இயலும். கூட்டுக் குடும்பத்தில் நிம்மதியும் நியாயமும் நிலவவேண்டுமாயின் அனைவரும் ஒன்று என்ற எண்ணத்தோடு, சமம் என்ற உண்மையும் விளங்கவேண்டும். அந்த உண்மையும் எண்ணமும் இன்று இந்தியத் துணைக் கண்டத்தில் இல்லை. ஒரு பகுதி நாளுக்கு நாள் ஓங்கி வளரவும் இன்னொரு பகுதி நாளுக்கு நாள் தேய்ந்து அழியவுமான அவல நிலை இருக்கிறது. இதுதான் நீக்கப்படவேண்டும் என்கிறோமேயன்றி என்றென்றும் ஒருவரோடொருவர் பகை வளர்த்துப் போரிடவேண்டும் என்று சொல்லவில்லை.

ஆனால் நமது தமிழகத்திலேதான் இப்படிச் சிலர் அந்த மயக்கம் தெளியாத நிலையில் உள்ளனர். மற்ற பகுதிகளில் நல்ல தெளிவு பிறந்துவிட்டது. தங்கள் தாயகம் வாழவேண்டும், வளரவேண்டும், செழிக்க வேண்டும், சிறக்க வேண்டும் என்ற எண்ணங்கள் மிகுகின்றன. அதற்காக அவர்கள் வாதாடவும், போராடவும் துணிகின்றனர். 'எவர் தடுத்தாலும் எமக்கு வேண்டியதை அடையாது விடோம்' என்று எக்காளமிடுகின்றனர். நமது மாநிலத்திலோ 'பரந்த' மனப்பான்மையில் எழும் தவறான 'தேசியம்' தலைவிரித்துக் கிடக்கின்றது.

இது புரியாததினால்தான் 'இமயமலை எங்கள் மலை' என்று பாடிய பாரதியை ஏனோ மற்றவர்கள் பாராட்டவில்லை?' என்று தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சி. விளங்காமல் திகைக்கின்றார். 'தேசியம் இன்னும் பிறைத் திங்களாக இருக்கிறது, வளரவில்லை' என்று காரணம் கண்டுபிடித்து அமைகின்றார்.

இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னும், இவ்வளவு பாடுகளுக்குப் பின்னும் இன்னும் அந்தப்பிறை வளரவில்லை என்றால் என்ன காரணம்? அது உண்மையான பிறையல்ல; பிறைபோல் செய்து வைத்துப் படம் எடுக்கிறார்கள் திரையில் காட்ட. அதைப்போல இந்திய அரசியல் திரையில் காட்டப்பட்ட செயற்கைப் பிறைதான் 'இந்திய தேசியம்' வெள்ளையனுக்காக அந்தத் 'தேசியம்' உருவாக்கப்பட்டது. படம் முடிந்து திரையிட்டதும் காட்சிகள் கலைக்கப்படும், படவேண்டும்—அப்போதுதான் அடுத்த படத்திற்கு அங்கே காட்சி சோடனைகள் போட இயலும். அதைப்போல வெள்ளையன் வெளியேறினதும் அவனை விரட்டுவதற்காகப் போட்ட காட்சி சோடனை—செயற்கைத் தேசியத்தை—இந்தியா ஒன்று என்பதைக் கலைத்துவிடவேண்டும். மற்றவர்கள் கலைக்கிறார்கள்—அதனால் பயனும் பெறுகிறார்கள். ஆனால் நமது மாநிலத்தில் சிலர் அந்த அட்டைப் பிறையைச் சுட்டிக்காட்டி 'ஐயோ இது இன்னும் வளரவில்லையே' என்று அங்கலாய்க்கின்றனர். பாவம்! அது வளராது என்பதை உணர்ந்து வளரவேண்டிய நாட்டை, மக்களைப்பற்றி எண்ணுவார்களாக. பெற்றதாயினும் பிறந்த பொன்னாட்டைப் போற்றி வணங்க பாரதியின் பாடல்கள் அவர்களுக்குத் துணைசெய்யுமாக.

★

பொன்னி! வா! வா! வத்சலா வீட்டுக்குப் போயிருந்தாயோ? எனக்கு இந்த ஒரு வாரமாக மனமே சரியாக இல்லே. எப்படி வத்சலாவைப் பார்ப்பது, என்ன சமாதானம் சொல்லுவது என்றே தெரியவில்லே. நாலு ஆயிரம் ரூபாய் ஒரே அடியாகப் போய்விடுவதென்ருல், பாவம், அவளோட மனம் என்ன பாடுபடும்! அவளுக்கு ஏதாவது சமாதானம் சொல்ல உன்னுல்தான் முடியும்.

நான் மட்டும் என்ன சமாதானம் சொல்ல முடியும்? என்ன சொன்னுல்தான், மனம் சமாதானமாகும்?

என்னமோடி பொன்னி! இதை எல்லாம் பார்க்கிறபோது, பேசாம, கிடைக்கற பணத்தை நகை செய்து போட்டுக் கொள்வதுதான், நல்லதுண்ணு எனக்குத் தோணுது. பணத்தை, பாங்கிலே போட்டு வைத்தா, பத்திரமாக இருக்கும், வட்டி வேறே கிடைக்கும் என்று ஆசைப்பட்டு, கடைசியிலே, பாரேன், முதலுக்கே மோசம் வந்துவிட்டுது.

அப்படித்தான் தோன்றும். ஆனு, பணத்தை, நகையாக்கறதும், தவறுதான். வீண் நஷ்டம், பணம், பாங்கிலே இருந்தா, நமக்கு வட்டி கிடைப்பது மட்டுமல்ல, அந்தப் பணம், எத்தனையோ பேருக்குத் தொழில் நடத்த உதவியாக இருக்கும். பலருக்கு வருவாய் கிடைக்கும்.

அது சரி, போ! இப்படிச் சொல்லிச் சொல்லித்தான், பாவம், வத்சலா, எவ்வளவு கஷ்டப்பட்டுச் சேர்த்தாளோ, அந்த நாலு ஆயிரமும், நாசமாப் போச்சி. ஆமா, பொன்னி! பணம் போனது போனதுதானு?

அப்படிச் சொல்லிவிட முடியாது. பாங்கின் கணக்கு வழக்குகளைச் சரிபார்த்து, வரவேண்டிய கடன்களை வாங்கி, கொடுக்கவேண்டியதைக் கொடுத்து, பிறகு இருக்கிற மிச்சத்திலே, ஆளாளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் பிரித்துக் கொடுக்கறது உண்டு- முன்னே ஒரு பாங்க், திருவாங்கூர் நாஷனல் பாங்க் என்கிற பாங்க், இது போலத்தான் முழுகிவிட்டது. ஒரே அல்லோகல்லோலம். பலருக்குப் பயம், நஷ்டம். ஆனு கடைசியிலே, போட்ட பணத்திலே முக்கால் பாகத்துக்கு மேலேயே திருப்பிக் கொடுத்துவிட்டாங்க.

சி. என். ஏ.

ஒரு ரூபா போட்டவங்களுக்கு அரைஅணுத்தான், கடைசியிலே நஷ்டம்.

அப்படின்னு, நம்ம வத்சலா போட்ட நாலாயிரத்திலே, ஒரு இருநூறே முன்னூறே குறைத்துக்கொண்டு, மத்ததைக் கொடுத்துவிடுவாங்கன்னு சொல்லு.

ஒரு பேச்சுக்குச் சொன்னேன். இந்தப் பாலே பாங்கின் விவகாரம் எப்படி இருக்குதோ, போகப் போகத்தான் தெரியும்......

பொன்னி! பாங்க் நடத்த வேணும்னு, இப்படி இப்படி யோக்யதை இருக்கணும், அவர்களிடம் இவ்வளவு பணம இருக்கணும்னு, சட்டம் இருக்கவேண்டாமோ. கண்டவாளெல்லாம், பாங்க் நடத்த வேண்டியதுதானு......?

காவி கட்டியவனெல்லாம் சாமியார் என்று எண்ணிக்கொண்டு, காலிலே விழுந்து கும்பிடமட்டும், தயார்! ஆனு, பணவிஷயம்னு, கட்டுத்திட்டம், தேவை என்கிறே, அப்படித்தானே......?

சமயம் கிடைத்தா விடுவாயா! உன்னோட பிரசாரத்தை ஆரம்பித்து விடமாட்டாயா! இலேசுப்பட்டவளா, நீ. அது கிடக்கட்டும்; கண்டபடி கண்மூடித்தனமாக பாங்க் ஆரம்பிக்க, சட்டம் இடம் கொடுக்கலாமோ? அதைச் சொல்லு.

கூடாது. சட்டதிட்டம் ஏற்படுத்தி அதன்படிதான், பாங்க் நடந்திண்டிருக்கு.

அப்படியானு, பாலே பாங்க் ஏன் முறியணும்?

சில வீடுகள், பார்க்க அழகா இருக்கும், மாளிகைபோல. ஆனு, சுவர்களிலே, விரிசல்விட்டிருக்கும், பார்த்திருக்கறயோ......?

ஆமா...அதனுலே......?

ஏன், அவ்வள்வு அழகான வீட்டுச் சுவரிலே, விரிசல் ஏற்பட்டுது. பாரம் தாங்காதது, ஒரு காரணம்; அஸ்திவாரம் பலமாக இல்லாதது மற்றொரு காரணம், சுண்ணும்புச் சாந்து சரியான முறையில இல்லாதது இன்னொரு காரணம்......

ஏண்டி பொன்னி! கொத்தனர் மகள் போலவே, பேசறியே. வீடு, கட்டவேணும்னு. இனி, உன்னைக் கூப்பிட்டுப பிளான் கேட்கலாம் போலிருக்குதே.

இதுவும் ஒரு காரணம்! இப்படி இப்படி வீடு இருக்கலாம், இன்ன

விதத்திலேகட்டவேண்டும் என்று சொன்ன உடனே, பொன்னிக்கு வீடு கட்டற பிளானே போடத் தெரியும்னு எண்ணிக்கொண்டு, நான் சொல்கிறபடி வீடு கட்டினு, என்ன ஆகும்? சுவரிலே விரிசல் தான் ஏற்படும்!

இளைக்கதை கிடக்கட்டும். பாங்க் விஷயம் சொல்லு.

வீட்டு விவகாரம் போலத்தான் அதுவும். விஷயம் தெரிந்தவர்களைக்கொண்டு சரியானபடி திட்டம் போடாதது முதல் தவறு. பிறகு, பளுவை நிறைய ஏற்றிக் கொண்டார்கள்; தாங்க முடிய வில்லையே; முறிந்து போய்விட்டது. அரிசி தாராளமா இருக்குதேன்னு, உலையிலே அள்ளி அள்ளிப் போட்டுக்கொண்டே இருந்தா என்ன ஆகும்?

போடி போக்கிரி! இதுகூடவா தெரியாது.

தெரியல்லே, என்பதாலேதான், இப்ப, பெண்களுக்குப் பள்ளிக் கூடத்திலே, சமைக்கறது எப்படி என்கிற பாடம்கூடக் கற்றுக் கொடுக்கிறதாகக் கேள்வி.

ஆமாமாம்! என்னுடைய சித்தப்பா, மூணாந்தாரம் கட்டிண்டு வந்தாரே, ஒரு கல்கத்தாக்காரி, அவ, சமயல் சாஸ்திரத்திலே பெரிய படிப்புப் படித்தவளாம். சொல்லிண்டா! சாம்பார்கூட நன்னு வைக்கத் தெரியாது......

தெரியாவிட்டா, என்ன? பாரேன், திடீர்னு ஒரு நாளைக்கு அவளை அமெரிக்கா அனுப்பி வைப்பா, அங்கே போய், நம்ம நாட்டுச் சமயல் முறை விஷயமா, சரமாரியாப் பேசிவிட்டு வருவா. பணம் கிடைக்கும்—பட்டம்கூடக் கிடைக்கும்.

அதென்னடி பொன்னி! அப்படிப்பட்டவர்களைத்தானு, அமெரிக்கா அனுப்பி வைக்கிரு? அங்குபோய், ஒண்ணு கிடக்க ஒண்ணு உளறிக் கொட்டினு, சிரிக்கமாட்டாளோ?

சிரிக்காமலா, இருப்பா! ஆனு, அது, நமக்கு எப்படித் தெரியப் போகுது. இட்லி சாம்பாருக்கும் இஞ்சிப் பச்சடிக்கும், அப்பளம் பப்படத்துக்கும் அமெரிக்காவிலே அமோகமான செல்வாக்கு ஏற்படுத்திவிட்டு வந்திருக்கும் குமாரிக்கு, வரவேற்பு நடக்கும்; கவர்னர் தலைமை வகிப்பார் என்று பேப்பர்களிலே, எழுதி விடுவர். படித்துவிட்டு, நாமெல்லாம், வாயைப் பிளந்து கொண்டிருப் போம்.

உனக்கு ஒரு விஷயம் தெரியுமோ? என்னுடை வீட்டுக்காரரோடு, ஒல்லியா, ஓணுன் மாதிரி ஒண்ணு சுத்திக்கொண்டே இருக்குமே, சதா, வெத்திலை போட்டுக் குதப்பிண்டு-கோணங்கிச்சேட்டை செய்துண்டு...

யாரு? வாய்யா, வத்தல் பாகவதரேன்னு, அழைப்பாரே, உங்க வீட்டுக்காரர்—அந்த ஆசாமியா?

அதே பாகவதர்தாண்டி பொன்னி! அதுக்கு வந்த யோகத்தைப் பார் — இப்ப அமெரிக்காதான் போயிருக்கு.—யோகாசனம் செய்துகாட்டவாம்...

யோகாசன்மா! அமெரிக்கர்களுக்கு, ரொம்பப் பிடிக்குமாமே, யோகாசனம்!

இங்கே, யாருடி, துப்பரு இந்த யோகாசனத்தை?

அதேபோலத்தான், அங்கே, அவர்கள் துப்பாதது இங்கே, வந்து சேருது. இதை எல்லாம் பார்த்துத்தான், இப்ப, மலேயாவிலே இருக்கிற முதல் மந்திரி, அடிக்கடி வெளிநாடுகளிலே இருந்து, கலாச்சாரக் கோஷ்டிகள், வருவது, நல்லது செய்யல்லே. எதிலேயும் கலப்படம்தான் ஏற்படுது; உண்மையான கலாச்சாரம் கெட்டுப் போய்விடுவதும் இதனுலேதான்; அதனுலே இனி, மலேயாவுக்கு, வெளிநாட்டுக் கலாச்சாரக் கோஷ்டிகளை, கண்ணை மூடிக் கொண்டு வருவதற்கு அனுமதி கொடுக்கப்போகிறதில்லேன்னு, சொல்லிவிட்டார்.

மலேயாவை, நம்ம நாட்டுக்காரர்கள், சொந்த நாடுபோல எண்ணிக் கொண்டிருக்காளே, அங்கேயும், இப்ப இப்படிப்பட்ட ஆபத்துக்கள் வந்தாச்சா? சிலோனிலேதான், ஆபத்து என்று சொன்னு! இப்ப, மலேயாவிலேயும், வந்துவிட்டதா ...உம்...!

ஏண்டி ஏற்படாது... இனி எந்த நாட்டுக்காரனும், தன்னுடைய நாட்டிலே, இன்னொரு நாட்டுக்காரன், வந்து சுறண்டிக்கொண்டிருக்க இடம் கொடுக்கவேமாட்டான்...

அப்படி ஒரு நியாயம் பேசிணு, பொன்னி! நம்ம நாட்டிலே மட்டும், மார்வாடியும் குஜராத்தியும் மந்தை மந்தையா வருவதும், வண்டி வண்டியாப் பணம் சம்பாதிப்பதும், சரியா?

சரின்னு, யார் சொல்லுவா? சரியில்லை என்பதாலேதான், திராவிட நாடு திராவிடருக்குன்னு, பேசரு, கேட்கரு?

ஒரே அடியா, அரசியலுக்கே, வந்துவிட்டயே...

நானு, வந்தேன். விஷயம் நம்மை அரசியலுக்கு அழைத்துக் கொண்டு, வந்துவிடுது......அதை எப்படித் தடுக்க முடியும்? பாலை பாங்க் விவகாரம் இருக்குதே, இதிலேகூட அரசியல் இருப்பதாகப் பேசிக்கொள்கிரு.

பாங்க் முழுகறதிலே, அரசியல் என்னடி இருக்கு, பொன்னி!

ஆட்சி நடத்துகிற கட்சி, நினைச்சா, எதையும் வாழவைக்கவும் முடியும், அழிச்சுக் காட்டவும் முடியும்.

அதுவும் உண்மைதான். செங்கோலுக்கு மிஞ்சிய சங்கீதம்னு, பழமொழிகூட உண்டு.

ஏன், நடைமுறையிலேயே, பார்க்கலாமே. சிலோன் நாட்டு ரேடியோ சங்கீதத்துக்கும், டில்லி ரேடியோ சங்கீதத்துக்கும், வித்தியாசம், இல்லையா... அந்தநாட்டு அரசியல், மக்கள் மனம் மகிழ, இனிமையான பாட்டு வேண்டும் என்று கூறுகிறது. இங்கு, இனிமை இல்லாவிட்டாலும் பரவாயில்லை; மக்கள் விரும்பிக் கேட்காவிட்டாலும் பரவாயில்லை; தரம் சரியாக இருக்க வேண்டும் என்ற அரசியல் இருக்கிறது.

என்ன அரசியலோ இது! நம்ம வீடுகளிலே சிலோன் ரேடியோ தான் கவர்ச்சிகரமாக இருந்திண்டிருக்கு.

உனக்கு வெட்கமாக இருக்கு; பலபேருக்கு வேதனையாகக்கூட இருக்கும்; ஆனு, நம்ம சர்க்கார், பிடிவாதமாக இருக்கிறதே.....நீ என்ன செய்வே?

இதிலேதான், வீராவேசம் காட்டும், நம்மோட சர்க்கார். பாவம், வாயைக்கட்டி வயித்தைக் கட்டி மிச்சம் பிடிச்சி, பணத்தைக் கொண்டு போய் பாங்கிலே

போட்டா, பணம் ஒரேயடியா, நாசமாகுது, அதைத் தடுக்க வழி செய்யக் காணோம்; இந்தப் பாட்டுத் தான் கேட்கணும்; இன்ன துணி தான் கட்டணும்னு, சொல்லவந்து விடரு.

முக்கியமானதை மறந்துவிட்டயே, ஏமலதா! இத்தனை குழந்தைகள்தான் பெற்றுக்கொள்ளணும்னுகூடச் சர்க்கார் சொல்லிண்டிருக்கே......

அதையும்தான் படித்தேன், ஏதோ பேப்பர்லே—பாதி படிக்கறதுக்குள்ளே, பத்மா இருக்காளே, படம் பார்க்கறேன்னு சொல்லி, என் கையிலே இருந்து பிடித்து இழுத்து, கிழித்துப்போட்டு விட்டா......

எந்தப் பத்மாவைச் சொல்றே?

ஏண்டி, உனக்குத் தெரியாதோ? என் தம்பியோட கொழந்தைதான் ...இப்பத்தான், டாக்டர்கூடவந்து போனார்...பிரசவ கஷ்டம் இருக்காதுன்னு சொல்லிவிட்டுப் போனர்—பத்மா கன்னத்தைக் கிள்ளி உனக்குத்தம்பிவேண்டுமா, தங்கை வேண்டுமான்னு, கேட்டு வேடிக்கை செய்தார்.

பத்மா, என்ன வேணும்னு கேட்டா?

அவ, உன்னைப்போல ஒரு போக்கிரியாச்சே....எனக்குத் தம்பியும் வேணும் தங்கையும் வேணும்னு சொன்ன? இரட்டைப் பிறப்பு வேணும்போல இருக்கு, அவளுக்கு.

இரட்டைக்குழந்தைகள் பிறந்தா இராமசாமி முதலியார் இலட்சுமணசுவாமி முதலியார் போல இருக்க வேணும். ஒருத்தருக்கு ஒருத்தர், எதிலேயும் சளைத்தவர்கள் அல்ல.

இரண்டு பேருமே டாக்டர்களாமே......

ஆமாம், ஆனா, வைத்தியம் செய்கிற டாக்டர், இலட்சுமணசுவாமி முதலியார்; வியாபாரம் செய்கிற டாக்டர், இராமசாமி முதலியார்.

குடும்பம் என்று இருந்தா, அப்படி இருக்கணும்டி, பொன்னி!

ஒரு அதிசயம் தெரியுமா? இராமசாமி முதலியார் இலட்சுமணசுவாமி முதலியார் இருவரையும் ஒரே நாளில் அழைத்து, மைசூர் சர்வகலாசாலையிலே, பட்டம் கொடுத்திருக்கா—போனவாரத்திலே.

ஏண்டி, பொன்னி! அப்படிப்பட்ட அறிவாளிகளைக் கூப்பிட்டாகிலும், யோசனை கேட்கப்படாதோ—பாலே பாங்க் விஷயமா?

சரியாகப் போச்சு போ! சொன்ன யோசனையையே, இன்னும் நிறைவேற்றக் காணோம். மேலும் கூப்பிட்டு, யோசனை கேட்கணுமா? நம்ம நாட்டுக்கு வந்து சேரவேண்டிய கப்பல்களெல்லாம், இப்ப, சிலோனைச் சுத்திக்கொண்டுதான் வரணும் — அதனலே நமக்கு எவ்வளவோ—கோடி கோடியா நஷ்டம் ஏற்பட்டிருக்குது; அதனலே, சேது சமுத்திர திட்டம்னு, ஒண்ணு ஏற்படுத்தி, கடலை, அந்தப்பக்கத்திலே ஆழப்படுத்தின நல்லதுன்னு சில பேர் யோசனை வெளியிட்டா. உடனே, இராமசாமி முதலியாரைத் தான் அழைச்சி, இது சரியா, எந்த முறையிலே இதைச் செய்யணும்னு, கேட்டா......

யார், கேட்டா......?

உங்க பாட்டன்! ஏண்டி, யாருடி கேட்பா? சர்க்கார்தான். அவரும் எல்லா விஷயத்தையும் ஆராய்ந்து பார்த்துத் திட்டம் கொடுத்தார்....

என்ன ஆச்சு அவர் கொடுத்த திட்டம்?

என்னைக் கேக்கறியே? போய்க் கேளேன், கதர்க்கடை கைலாசத்தை!

கதர்னு சொன்னதும் கவனம் வந்தது. கதர் வாங்கின ரூபாய்க்கு 31 பைசா, தள்ளித் தருவாளாமே..

......

முப்பத்தொன்று என்ன, முழுவதும்கூடத் தள்ளிக் கொடுப்பா. என்ன நஷ்டம் அதனலே; இவர்கள் எவ்வளவு தள்ளிக்கொடுக்கருளோ, அந்தப்பணம், சர்க்கார் கொடுத்து விடப்போகுது. சர்க்கார் கொடுக்கறதுன்ன என்ன? ஜனங்க தலையிலேதான் அதுவும் வந்து விழப் போகுதுன்னு அர்த்தம்.

ஆமாம்... ஒரு கையாலே கொடுத்துவிட்டு, மறுகையாலே பறித்துக்கொள்கிற கதையாத்தான் முடியுது. ஆமாம், சேது சமுத்திரத் திட்டம், வருமா வராதா?

எனக்கென்ன ஜோதிடமா தெரியும். சேது சமுத்திரத் திட்டத்தை ஆரம்பிக்காவிட்டா, எங்க 'ஓட்டு' உங்களுக்கு இல்லைன்னு, நாமெல்லாம், சொன்ன, சர்க்காருக்குக் கொஞ்சம் பயமாவது ஏற்பட்டுக், காரியம் செய்வா. நமக்கு, எங்கே தோணுது, அந்தமாதிரி யோசனை. பூவை எப்படிச் செருகிகொள்வது; செருகிகொள்ளலாமா, அல்லது சரம் சரமாத் தொங்கவிடலாமான்னு, புதுசுபுதுசா யோசனை உதிக்குது...

வாஸ்தவமான பேச்சடி பொன்னி! வெள்ளிக்கிழமை கான் சபா போயிருந்தேன், நம்ம சரசு வந்திருந்தா—சரம் சரமாத் தொங்கிண்டுதான் இருந்துது, பூச்சரம். இந்தத் தினுசு, யார் கத்துக் கொடுத்தாளோ தெரியல்லே...

இதிலே, கத்துக்கொடுக்க என்ன இருக்கு? ஒருத்தரைப் பார்த்து இன்னொருத்தர். முதமுதல்லே, எவளாவது ஒருத்தி வைத்திருந்த பூ, அவிழ்ந்து, தானக, சரமாகக் கீழே தொங்கியிருக்கும். அவ அதைக் கவனித்திருக்கமாட்டா. வேறே ஒருத்தி இதைப் பார்த்து விட்டு, இது புதுத் தினுசு போல இருக்கு என்றுஎண்ணிக்கொண்டு பூவை முடித்துக்கொள்ளாமல், செருகிக்கொள்ளாமல், சரமாகவே தொங்கவிட்டிருப்பாள்! அதைப் பார்த்து இன்னொருத்தி; மற்றொருத்தி; இப்படித்தான் பரவி இருக்கும்.

இது ஒரு கெட்ட பழக்கம்டி, பொன்னி! நம்ம நாட்டிலே, ஒருத்தர் ஒண்ணு செய்தா, உடனே அதைப் பார்த்து மத்தவாளும் அதைப்போலவே செய்யறது...

அந்தக் கெட்ட பழக்கமும் ஒரு காரணம்னு சொல்லணும், பாலே பாங்க் முறிவுக்கு.

என்னடி பொன்னி, புதிர் போடறே?

ஏமலதா! பாலே பாங்கின்னு ஒண்ணு இருக்குது—பிரமாதமான பேர் அதுக்குன்னு ஒருத்தர் சொன்ன உடனே ஒன்பது பேர் நம்பி, ஆமாமாம், பாங்கின்ன பாலே பாங்கிக்கு நிகர் வேறே கிடையவே கிடையாதுன்னு, பேசியிருப்பா. ஒருத்தர் பணம் போட்டிருப்பா, பிறகு எல்லோரும் ஓடியிருப்பா பணம்போட......

அதைப்போலவே, முதலிலே, ஒருத்தருக்கு இலேசாகச் சந்தேகம் வந்திருக்கும்; பாலே பாங்க் அவ்வளவு சரியான நிலையிலே இல்லை என்று; உடனே அவளுக்கும், ஆரா, அதையே பேசிப் பேசி,

எல்லோர் மனதிலும் திகில் மூண்டுவிடச் செய்திருப்பார். என் பணத்தைக் கொடு, இப்பவே கொடு, உடனே கொடுன்னு, பல பேர், ஒரே நாளிலே ஓடி இருப்பா, பாங்குக்கு. பலபேர் போறதைப் பார்த்து, மத்தவர்களும் ஓடி இருப்பா. எல்லோரும் ஒரே நாளிலே, பணத்தைத் திருப்பிக் கொடுக்கச் சொல்லிக் கேட்டா, என்ன ஆகும்?

அவாளவா போட்ட பணத்தைத்தானே திருப்பித் தரச் சொன்னு? கொடுக்கறதுக்கு என்ன கேடு?

இருந்தாத்தானே கொடுக்க, பணத்தை, பாங்க்காரன், யாரா ருக்கோ, தொழில் நடத்தக்கடனுகக் கொடுத்துவிட்டிருந்தான். திருப்பி வந்துவிடுமா, உடனே? அதனுலே, கையை விரிக்கவேண்டி நேரிட்டு விட்டது. போட்ட பணத்தைத் திருப்பித் தரவில்லை என்ற உடனே, பாங்க் முறிந்து போச்சுன்னு ஊரே அமளியாகிவிட்டது.

அப்படின்னு, கொஞ்சம் கொஞ்சமா, பணத்தைத் திருப்பித் தரச் சொல்லி இருந்தா, பாலை பாங்க் முறிந்து போயிருக்காதுன்னு, சொல்லு.

அப்படியும் சொல்லிவிட முடியாது. என்னு, பாலை பாங்க்காரன், பலபேருக்குக் கடன் கொடுத்திருந்தானே, அதிலே பாதி தொகைக்கு மேலே திரும்பியே வராதாம்......

பொறுமானம் இல்லாத ஆசாமிகளுக்கெல்லாம், இந்தப் பாங்க்காரன் ஏன் பணம், கடன் கொடுக்கணும், இப்படி ஊரார் தலையிலே, கைவைக்கணும்?

அவன் செய்த தப்பு, அதுதான். அதனுலேதான், இந்த அல்லலே, வந்துது. இதுவரையிலே 280 பாங்க்குகள் முழுகிப போயிருக்குன்னு, கணக்குச் சொல்லி இருக்காளே......

எவ்வளவு பேரோட பணம் நாசமாகிஇருக்கும்; இதனுலே வத்சலா ஏமாந்ததுபோல, எத்தனைபேர், ஏமாந்தார்களோ, பாவம். புருஷனைச் சும்மாவிட மாட்டா, வத்சலா. எந்த பாங்க் எப்படிப் போனுலும், எனக்கென்ன, உம்ம பேச்சைக் கேட்டுக்கொண்டுதான், நான் பணத்தைப் பாலைபாங்க்கிலே போட்டேன்; பணத்தைத் திருப்பித் தரவேண்டிய பொறுப்பு, உமக்குத்தான்னு, அழுதிருப்பாளே...,விடுவாளா......?

அப்படி அவளுக்கு அந்த 'வித்தை' சரியாகத் தெரியாமப் போனு, இருக்கவே இருக்கறே, நீ, சொல்லிக் கொடுக்க......

ஏண்டி, நீ, என்ன என்னை சித்ராங்கின்னே எண்ணிண்டு பேசறயா....

அவ யார், சித்ராங்கி...? ஓஹோ! சாரங்கதாரா கதையிலே வருகிறவளா......

ஆமாமாம்...அவ கிடக்கட்டும், சித்ராங்கி......நீ, எப்பத்தான், முடிக்கப்போறே, தங்கத்தாமரை கதையை......

முடிக்கறதாவது.......இப்பத்தானே ஆரம்பித்தேன், கதையை. அதற்குள்ளே பாலை பாங்க் தொல்லை வந்துது...... வத்சலா, கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கற போது, கதை சொல்ல, மனம் இல்லைடி ஏமலதா......!

அவளும்கூட, வருத்தப்படுவா! பணம் போச்சேன்னு நாம், கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கறோம், இவ ரெண்டுபேரும், பாரு, கதை பேசிண்டு சந்தோஷமா இருக்கரு, கொஞ்சமாவது, நம்ம விஷயத்திலே பச்சாதாபம் இருக்குதான்னு, நினைச்சி அதற்காகவேறே கஷ்டப் படுவா......உம்! என்ன கஷ்டப் பட்டு, என்ன பலன்? போனது போனதுதானே......திரும்பிவரவா போகுது.........சர்க்கார் இருக்கே கொட்டாப்புளி மாதிரி, இந்த மாதிரி விபத்தெல்லாம் நேரிடாமப் பார்த்துக்கொள்ளக்கூடாதோ...... எங்களைப்போல வேறே ஆசாமிகளே கிடையாது, ஆட்சி நடத்தன்னு, மட்டும் பேசிக்கொள்கிரு அக்ரமங்களைத் தடுக்க, வக்கு இல்லை......

ஆமாம்...... ஆனு அதைத் தெரிந்துகொள்கிற 'வக்கு' நமக்கு இல்லையே, தேர்தல் காலத்திலே... பணத்தை வீசினு, பல் இளிக்க வேண பேர் இருக்கான்னு அவர்களுக்குத் தெரியாதா... ஏமலதா! போன தடவை நடந்த தேர்தலிலே காங்கிரஸ் கட்சி ஐந்து கோடி ரூபாய் செலவழிச்சி இருக்கு, தெரியுமோ?

ஐந்து கோடி ரூபாயா! தேர்தல் செலவுக்கா! ஏண்டி பொன்னி! உனக்குக் காங்கிரசென்றுலே பிடிக்காது, அதனுலே சொல்றயா, இப்படி ஒரு பழி.

நானுகச் சொல்லவில்லையடி அம்மா! காங்கிரஸ் மந்திரி ஒருத்தரே, இதைச் சொல்லி இருக்கிரு, பம்பாயிலே...... பத்து இருபது நாளைக்கு முன்னுலே.

ஐந்து கோடி ரூபாய், எதுக்காகடி, பொன்னி!

பைத்யக்காரிடி, நீ! ஜீப்பா ஓடுதே—தண்ணியிலேயா ஓடுது! புதுசு புதுசா கதர் போட்டுக்கொண்டு சுத்தி வாராங்களே, தொழிலே இல்லாமப்படிக்கு, எப்படி? பேப்பர்கள் போர் போரா அச்சடித்துத் தருகிருங்களே, எப்படி! அதுமட்டுமா? அந்த ஊருக்கு ஆருயிரம், இந்தத் தெருவுக்கு இரண்டாயிரம், நாட்டாண்மைக்காரருக்கு நாலாயிரம்னு பணம், சரமாரியாப் பாயுதே, தேர்தல் காலத்திலே. இதெல்லாம்தான், ஐந்து கோடி! வசூல் செய்தோம், செலவு செய்தோம் என்று பெருமையாத் தான்பேசியிருக்கார், டில்லி மந்திரி.

அப்படியா...... யாரிடம் வசூல் செய்திருப்பா?

என்ன கேள்வி கேட்கிறே, பாரு! யாரிடம் பணம் இருக்குதோ அவர்களிடம்தானே, வசூலிக்கமுடியும். பெரிய பெரிய முதலாளிகளிடம் தான்...

முதலாளிகள் பணம கொடுத்தா, பிறகு, அவர்கள் சொல்கிறபடி தானே, இவர்கள் கேட்கவேண்டி வரும்...

ஆமாம்... அதிலே என்ன சந்தேகம்...

ஏழை எளியவர்கள் வாழ என்னென்ன வழி என்று முதலாளிகள் எப்படிச் சொல்லமுடியும்?

முடியாது. அதனுலேதான் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலின்போது காங்கிரசுக்கு ஓட்டுப்போடக் கூடாது. ஏனென்ருல், காங்கிரஸ் ஏழைகளைப் காப்பாற்ருது. புள்ளிமான குட்டிக்குப் புலி பால் கொடுக்காது—என்று சொன்னுர்கள்.

ஆமாம், கவனமிருக்குது பொன்னி! எங்க வீட்டுக்காரர் கூடச் சொன்னுர் அப்போது, இந்தத் திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்போல அழகான தமிழ்

பேசுகிறவர்களை, கிடையாது, என்று.

ஏமலதா! அதுகூடத் தப்பு என்றுபேச, ஆள் இருக்கிறதே, இந்த நாட்டிலே, தெரியுமோ...

கட்சிமாச்சரியத்திலே தப்புன்னு சொல்லுவாளே தவிர, அவர்களுக்கேகூட, உண்மை தெரியாதா என்ன? தமிழ் மொழியோட பெருமையே, அவர்களாலே தான் உயர்ந்திருக்கிறது என்று, பலபேர் பேச, நானே கேட்டிருக்கிறேன்.

பரவாயில்லயே, ஏமலதா! சில சில வேளைகளிலே, உன் காதிலே கூட நல்ல விஷயம் விழறதே...

போடி, போக்கிரி! நீ என்ன, என்னை வெறும் கிணற்றுத்தவளை என்றே எண்ணிக்கொண்டாயோ ...எனக்கும், ஊர்போகிற போக்கு, உலகம் போகிறபோக்கு, தெரிந்து தான் இருக்கிறது.

சரி! சரி! மணிபோகிற போக்கும் தெரியவேண்டும். இனிநான் இருப்பதற்கில்லை... அவரும் நானும் ஒரு நாடகம் பார்க்கப்போகணும், வரட்டுமா......

நாடகம் பார்க்கக் கிளம்புகிறீர்களா, ஜதையாக...உம்! பால்யம் திரும்பறது என்பாளே, அது இது தான் போலிருக்கு......

ஏண்டி, ஏமலதா! உனக்கு என்ன ஜோதிடம் தெரியுமா...எப்படித் தெரிந்தது, நான் பார்க்கப் போகிற நாடகத்தோட பெயர்?

நீ பார்க்கப்போகிற நாடகத்தின் பெயரா...?

ஆமாம்...பால்யம் திரும்பறதோ ...ன்னு சொன்னயே, அதேதான், ஆனா அதை நல்ல தமிழாக்கி, "மீண்ட இளமை"ன்னு, நடத்தரு...

எந்தக் கம்பெனியோட நாடகம்?

கம்பெனியா? இப்போது, ஏது, நாடகக் கம்பெனி! அவரவர்கள் கம்பெனி நடத்தி நடத்தித் தலை மொட்டையாகிப் போய்விட்டதே அவ்வப்போது நடிகர்கள் குழுக்கள் அமைத்துக்கொண்டு நடத்துகிறார்கள், நாடகம். அதிலேகூட எத்தனையோ, கஷ்டம். என் தம்பி, இப்படி ஒரு நாடகக் குழு அமைத்திருக்கிறான்.

அப்படிச் சொல்லு......தம்பி நடத்தப்போகும் நாடகம்தானா, மீண்ட இளமை......சரி சரி...அவன் தான், கதா நாயகனா......

இல்லை, இல்லை...அவன்தான், கதை, வசனம்......

பலே! பலே! பொன்னி! நேற்று மட்டும் எனக்குச் சொல்லி இருந்தால், நான்கூட வந்திருப்பேனே...

பரவாயில்லை. முதல் தடவையாக நடக்கப் போகிறது. பார்த்து விட்டு வந்து, நாடகம் நன்றாக இருந்தால், உன்னை அழைத்துப் போகிறேன்...நேரமாகிறது, வரட்டுமா......

★

"வாழப்பிறந்தவன்"

—[தி. செயராமன்]—

நண்பகல்' கோடையின் கொடுமை தாங்காது குளிர்பானங்கள் குடித்துக் கிடந்தனர் பலரும்! ஆடுகளும் மாடுகளும் மரநிழலில் வெப்பத்தை தாங்கமுடியாது மேல்மூச்சு —கீழ்மூச்சு வாங்கப் படுத்துக்கிடந்தன! பணக்காரர் வீட்டில் சேர்ந்துவிட்ட 'பாக்கியம்' பெற்ற நாய்கள் சுழலும் மின் விசிறிகளுக்குக் கீழே கட்டப்பட்டிருந்தன! ஆனால்...... எத்தனையோ உருவங்கள் வயிற்றைக் 'கழுவ' எத்தகைய கொடுமையை ஏற்றிடவும் துணிந்து பணியாற்றின!

அதோ, அந்த மில்லுக்குரியவர் பஞ்சுப்பொதிகளைச் சேமித்து வைக்க இடம் போதாதென புதிய தோர் மாளிகையை நிர்மாணிக்கும் வேலை நடைபெறுகிறது. கல்லுடைப்போர்—மண் சுமப்போர்—நீர் மொண்டு வருவோர் — சேறு குழைப்போர்--காரை கலக்குவோர் —கட்டை வெட்டுவோர்—கட்டடம் கட்டுவோர் இப்படி, நெற்றியிலே அரும்பும் வியர்வைத் துளிகள் முத்து முத்தாகத் திரண்டு நின்றிடத், தத்தம்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

நிலத்தின் வளத்தையும்—எல்லையையும் அறியாத மிராசுதார் வயலிலே கால் வைக்காமலே வைர மோதிரம் அணிந்துள்ள சுட்டுவிரலால் சுட்டிக் காட்டுகிறார் சாய்வு நாற்காலியில் அமர்ந்தவாறு.

முழங்கால் சேற்றிலே முக்கி முணகி நாற்றுநடும்காட்சி, அதற்கு வேண்டிய உரம் மூட்டைகளில் சுமந்துசென்று முதுகு வலியால் மூச்சுத்திணற அமர்ந்திருக்கும் முத்தையன்!

கல்லிலும் முள்ளிலும் நடந்து வியர்வை சொட்டச்சொட்ட விறகு வெட்டி வயிறு வளர்க்கும் வீராயி!

வயிற்றில் வளர்கிறது கணவன் அளித்த அன்புக் காணிக்கை. பிஞ்சுமொழி பேசிட ஒரு திங்கள் பொறுத்துக் குதிக்கப் போகிறது. அதனையும் சுமந்தபடி துடிக்கும் வெய்யிலிலும் கல்லுடைக்கும் காத்தாயி!

இரவு, புல்லும் புண்ணாக்கும் வைத்தால்தான் தன் ஒரே பசு கால்படியேனும் பால் தரும் என்று ஒரு கட்டை விற்றுப் புண்ணாக்கு வாங்கக் காசாக்கிக்கொண்டு மறு கட்டுக்கு, அவசர அவசரமாக இரண்டு சோற்றுப் பருக்கையை அள்ளி வாயில் போட்டுக்கொண்டு விரைந்து செல்லும் மாரியாயி!

இப்படி பல்ப்பலர் கணக்கிலடங்காதார் வாழ்க்கைக்காகப் போரா

டும் காட்சியினை—ஒரு சில மணி நேரங்களை ஒதுக்கிவைத்துத் கண்ணோட்டத்தை அகலமாக்கிப் பார்த்தால் காணலாம்.

இன்னொர் காட்சி! கருமை நிற உருவம்—இளமை துள்ளும் பருவம்தான் எனினும், அந்த இளமைத் துடிப்பு இல்லை. அவற்றினையெல்லாம் அடக்கிவைத்து நாட்கள் கடந்துவிட்டனபோல் காணப்படுகிறது. குளத்திலோ குட்டையிலோ விழுந்தெழுந்து வந்தது போல் உடலெங்கும் வியர்வை மழை! உழைத்துழைத்து உடல் வளர்ச்சி குன்றிக் கிடக்கிறது. தலையிலே அழுக்கேறிய துண்டு! அந்தத் துண்டுதான் வேலைக்குப் பின் வியர்வையைத் துடைக்க உதவும். நெற்றியிலே கவலைக் கோடுகள், கண்களிலே மிரட்சி! எனினும் எதையோ பெறவேண்டுமென்ற ஆவல் காணப்படுகிறது. பார வண்டியை இழுத்து வருகிறான்! அவன் பெயரோ 'வாழப்பிறந்தவன்!' வாழப்பிறந்தவன் இழுத்து வந்த வண்டி வேகமாகவே வந்தது. சின்னஞ் சிறுமேடு அந்தத் தார்ரோட்டில்; வேகம் தடைப்பட்டது! அதற்குள்ளே பின்னல் வந்த 'பிளசர்' காது செவிடுபடும்படி ஒலி எழுப்பிற்று! பஸ் வேறு—''சீக்கிரம் போப்பா! இதுகளுக்கு 'ஏரோப்பிளேனை இழுத்துகிட்டு போவதுபோல் எண்ணம், அறிவில்லை? இப்படியா நடுரோட்டில் யானையைப்போல் அசைவது! ஊம்......ம் சீக்கிரம் போடா சோம்பேறிப் பயலே!'' இப்படிப் பலக்குரல்கள் கேட்டன! தனது உடலிலுள்ள பலத்தையெல்லாம் ஒன்றுகூட்டி இழுத்து வண்டியை ஓரத்தில் நிறுத்தினான் வாழப்பிறந்தவன்.

''உங்களுக்கு வேணும்னா — ஒரு மணி நேரமானாலும் நிறுத்திவிட்டு இருக்கிறீங்க—ஒரு ஐந்து நிமிடம் அவன் இழுத்து ஓரத்திலே நிறுத்துவதற்குள் காட்டைவிட்டு —கோட்டையை அடையப் போறவங்கபோலக் கத்துரீங்களே!'' இப்படி ஒருவர் ஆவேசமாக அவனுக்காகப் பரிந்து பேசினார். ''யாரப்பா, காந்திமகான் — புத்தர் — ஏசு!'' என்ற கிண்டல் மொழியோடு திரும்பினார் டிரைவர். பஸ் முழுவதும் ஒரே பெருஞ்சிரிப்பு! அந்த மாமேதைகள் எதுக்காகச் சிரித்தனரோ யார் அறிவர்.

அவர் அதற்காக வெட்கமோ வேதனையோ அடையவில்லை. குரலிலே கம்பீரமும் சொல்லிலே தெளிவும் பெற்றுப் பேசினார். ''யார் யாரோ எதையெதையெல்லாமோ கண்டுபிடித்ததாக கூறுகின்றனர். ''புஷ்ப விமான''த்தில் பவனி வந்து படியளந்ததாகவும் இன்னல் போக்கி இன்பம் அளித்ததாகவும்—இப்போதுள்ள 'ஹெலிகாப்டர்' விமானங்கள் அந்த புஷ்ப விமானத்தின் மாதிரி என்றும் பேசுகின்றனர். ஆனால், அந்த பகவானையும் அவர் வாகனத்தையும் இந்தக் கைவண்டி மனிதன் இழுத்துச்சென்று அபயம் அளிக்கும் காட்சியினை காண்கிறோம்...''

''நாத்திகம் பேசி ஏனய்யா நாக்கைக் கெடுத்துக்கொள்ளுகிறீர்கள்.'' எதிர்புறமிருந்து ஒரு நாமம் போட்ட தசை வளர்த்தவர் குரலெழுப்பினார்.

''என்னய்யா, இது பொதுஇடம் என்ற நினைப்பா? வாதத்திற்கு வேறு இடம் வைத்துக்கொள்ளுங்கள்'' என்று கடுமையான குரலில் தனக்குள்ள அதிகாரத்தைக் கண்டக்டர் தெரிவித்துக்கொண்டார்.

வண்டியும் வேகமாக ஓடத் தொடங்கியது.

'வாழப்பிறந்தவன்' கைவண்டியை ஓரத்திலே நிறுத்திவிட்டுத் தலைத்துண்டால் மேனியிலே வழிந்த வியர்வையைத் துடைத்தான். 'விர்...விர்' என்று போலீஸ் ஊதலும் ''வண்டியை எடப்பா! வீடுன்னு நினைச்சியா—ரோடுன்னு நினைச்சியா—ஊம்......ம்......சார்ஜ் பண்ணிடுவேன்''

வேகமாகத் துண்டை தலையில் கட்டிக்கொண்டு வண்டியை இழுக்கும் வேலையில் ஈடுபட்டான்.

வருகின்ற திங்கள் அத்தை மகள் அன்னபூரணியைத் திருமணம் செய்துகொள்ளப் போகிறான் அவன். கையிலே நூறு ரூபாய் இருக்கிறது — இருபத்து நான்கு மணி நேரமும் பாடுபட்டு மிச்சப்படுத்தியது. இன்னும் நூறு வேண்டும். அதனால்தான் பிறர் ஏச்சும்—பேச்சும் அவன் காதில் வாங்காமல் கடமையிலே கண்ணாயிருக்கிறான்.

அந்த இருநூறு அவனுக்கு இலட்சத்திற்கு ஈடு! எத்தனையோ பணக்காரக் குடும்பங்கள் வருவோர் போவோரின் காருக்கு 'பெட்ரோல்' செலவாக மட்டும் இரண்டாயிரம் மூவாயிரம் என்று செலவு செய்கிறார்கள். ஏழைக்கு! ...அவனது சிந்தனை எங்கெங்கோ சுற்றிப் பறந்தது.

சேரவேண்டிய இடம் அடைந்தான். வண்டி இழுத்துவந்த களைப்பு—சோர்ந்து உட்கார்ந்தான். திணறினான்—மூச்சு சுலபமாக விடமுடியவில்லை. நெஞ்சடைத்தது. சாய்ந்தான் மண்ணிலே! அந்தோ — சாய்ந்தவன் மீண்டும் எழவேயில்லை!!

''என்னங்க, என்னதான் இருந்தாலும் இப்படியா இத்தனையும் வைத்து இழுத்து வருவது புத்தி வேண்டாம்.''

''இந்தப் பயல்களே இப்படித்தான் இரண்டணா ஓரணா அதிகமாகக் கிடைக்குதுன்னா மலையையே வைத்து இழுக்கவும் துணிவானுங்க!''

''அடுத்த மாதம் திருமணமாம். அவன் எண்ணத்திலே என்னென்ன உதயமாயிற்றோ.''

''ஊம்... அவன் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். அவன் செய்த பாக்கியம்''

இப்படி அவனைப்பற்றிய பேச்சுக்கள் அங்கே மாறி மாறி ஒலித்தன.

★

போர் வீரர்கள் செல்வதற்கு முன், பாதை போடுவோர், கரடுமுரடான பாதைகளைச் செப்பனிட்டு முன்னே செல்வதுபோல, நம்முடைய எதிர்கால சந்ததிகளுக்கு நாம் முள்ளும் கல்லும் புதரும்போல நம் சமுதாயத்தில் அடர்ந்துள்ள ஆபாசங்களையும், ஊழல்களையும் அறவே ஒழித்து நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கிக் கொடுத்துவிட்டுச் செல்வது நம்முடைய தலையாய கடமைகளில் ஒன்றாகும்.

சோதனை

கனகு

பெரியதொரு கூச்சலுடன் நிலையத்துள் புகுந்து நின்றது, புகை வண்டி. அதுவரை தூங்கி வழிந்துகொண்டிருந்த நிலையம், அதிகாரியைக் கண்ட ஊழியனைப்போல, நீண்ட இடைவெளிக்குப் பிறகு தலைவனைக் கண்ட வீட்டுத் தலைவியைப்போல் சுறுசுறுப்பும், கலகலப்பும், பரபரப்பும் கொண்டது. சீட்டுப் பரிசோதகர் ஒருவர் வண்டியிலிருந்து இறங்கி, ஒவ்வொரு பெட்டியாகப் பார்வையை ஓட விட்டுக்கொண்டு வந்தார் — யாரையோ தேடிக்கொண்டு வருபவர்போல். ஒரு பெட்டியில் கூட்டம் நிறைந்து,நெருங்கி வழிந்துகொண்டிருந்தது. சிலர் அதிலிருந்து இறங்கமுடியாமல் இறங்கிக்கொண்டிருந்தார்கள். பலர் அதற்குள் ஏறி நெருக்கடியை மேலும் பெருக்குவதற்கு முயன்று முனைந்துகொண்டிருந்தார்கள். அந்தப் பெட்டியில் ஏறும் உத்தேசத்தோடு, அதன் எதிரில் மார்வாடிக் குடும்பம் ஒன்று நின்றுகொண்டிருந்தது. அந்த மார்வாடிக் கூட்டத்தைக் கண்டதும் சீட்டுப் பரிசோதகர் அங்கே விரைந்து ஓடிவந்தார்.

"சேட், ஏன் நிற்கிறீர்கள்? இடம் இருக்கும் பெட்டியைப் பார்த்து ஏறிக்கொள்வதுதானே?" என்று அந்த மார்வாடிக் கூட்டத் தலைவனிடம் விநயமாகக் கேட்டார் சீட்டுப் பரிசோதகர்.

"ஹரே, நிப்பள்...!" என்று வியப்போடு பரிசோதகரைப் பார்த்தார் அந்த மார்வாடி. வேறொன்றும் இல்லை. இரண்டு மூன்று வாரங்களாக இந்தப் பரிசோதகரை அந்த மார்வாடி தேடிக்கொண்டிருக்கிறார். 'மூன்றே வாரத்தில் திருப்பி விடுகிறேன்' என்றுகூறித் தங்கக் கழுத்தணி ஒன்றை ஈடு வைத்து இருநூறு ரூபாய் வாங்கி இருந்தார் இந்தப் பரிசோதகர் அந்த மார்வாடியிடம். இப்போது மூன்று மாதங்களும் முடிந்து, நாலாவது மாதமும் ஆகி, மேலும் நாட்கள் சென்றுகொண்டிருந்தன. வட்டி, முதலில் முக்காலாக ஏறிக்கொண்டு விட்டது. 'நகையைத் திருப்பிக் கொள்கிறாயா, அல்லது அதை விற்று வட்டியையும் முதலையும் எடுத்துக்கொள்ளட்டுமா' என்று கேட்பதற்குத்தான் மார்வாடி தேடிக்கொண்டிருந்தார் பரிசோதகரை. இன்னும் இரண்டு மாதங்கள் 'கெடு' கொடுங்கள், அதற்குள் வட்டியையும் முதலையும் சேர்த்துவிட்டு நகையைத் திருப்பிக்கொள்கிறேன்" என்று கேட்க விரும்பினார் பரிசோதகர். 'மார்வாடி அதற்கு ஒத்துக்கொள்வானா, அல்லது முடியாது என்று மறுத்துவிடுவானா' என்ற தயக்கத்தில் அதை அவரிடம் கேட்கவில்லை. எப்படியோ போய்த் தொலையட்டும் என்று முடிவாக விட்டுவிட்டார். இன்று அவர்கள் இசைவு பிசகாகச் சந்தித்துக்கொண்டு விட்டனர்.

"நம்பள் பாம்பேமேலே போறான் இந்தக் காரேஜ் மேலே போனா நம் பள்கி சௌரியம் வர்ரான். இந்தப் பெட்டி மேலே போனா அங்கே எக்ஸ்பிரஸ்மேலே இது சேக்கறான். இல்லே?"

அந்த மார்வாடி சொல்வதைப் பரிசோதகர் புரிந்துகொண்டார். அவனுக்கு இடவசதி செய்து கொடுக்க வேண்டுவது இனி அவர் பொறுப்பு. அதன்மூலம் அவனுடைய நல்லெண்ணத்தைப் பெற முடியுமா ஓரளவு என்று பார்க்க முனைந்தார் அவர்.

அந்தப் பெட்டிக்குள் நெருக்கியடித்துக்கொண்டு நின்ற ஒவ்வொருவரின் பயணச் சீட்டையும் வாங்கிப் பரிசோதிப்பவர்போல், அதில் ஏறி இருந்த ஒரு பகுதியினரையே பரிசோதகர் கீழே இறக்கிவிட்டார்—அவர்கள் நெடுந் தூரப் பயணம் செய்பவர்கள் அல்லர் என்ற காரணங்காட்டி. பாவம் அவர்கள் மூட்டை முடிச்சுகளைத் தூக்கிக்கொண்டு வேறு இடம் தேடிப் பெட்டிக்கு ஒருவராக ஓடினார்கள்.

பரிசோதகர் அந்த மார்வாடிக் கும்பலுக்குத் தனியாக ஒருபுறத்து ஆசனங்களையே ஒதுக்கிவைத்துவிட்டு, அவர்களை ஏறிக்கொள்ளும்படி பணிவுடன் கூறியதோடு, ஏறி வசதியாக அமர்ந்துகொள்வதற்கு உதவியும் செய்துவிட்டுத் திரும்பிய போதுதான், அந்தப் பெட்டியின் ஒரு புறத்து நடைப்பக்கமாக அவருடைய கவனம் சென்றது. உடனே வந்துவிட்டது சீற்றம் அவருக்கு.

"ஏய், இறங்கு கீழே; இறங்கு இறங்கு! இவ்வளவு நேரம் என்னை ஏமாற்றிக்கொண்டு இங்கேதான் இருக்கிறீர்களா?" என்று அதட்டிக்கொண்டு ஓடினார் அவர். அங்கே ஒண்டி ஒடுங்கிக்கொண்டு கிடந்த நாலைந்து உருவங்களைக் கீழே தள்ளிவிடுவதற்கு முனைந்தார். அவை அஞ்சி, நடுங்கி—பரக்கப் பரக்கக் கீழே இறங்கிக்கொண்டன. நிலையத்தின் வெளிவாயிலைத் தாண்டி, அப்பால் அவற்றைக்

கொண்டு போய்த் தள்ளிவிட்டுத் தான் திரும்பினார் அவர்.

திரும்பியவரின் பார்வை அந்த மார்வாடிக் குடும்பத்தின் மீது விழுந்தது. அவர்களை நோக்கி இரண்டடி எடுத்து வைத்தவர் மறுபடியும் வாயிற் புறமாகத் திரும்பி நோக்கினார். அவரால் துரத்தப்பட்ட அந்த உருவங்கள் வெளியே, இரும்பு வேலியருகே நின்றபடி வண்டியை வெறிக்க வெறிக்க ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்தன.

அந்தப் பரிசோதகருக்கு நன்றாக நினைவு இருந்தது; — ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் —வெளியே துரத்தப்பட்ட அந்த உருவங்கள் ஓரளவு மனிதராகக் காட்சி தந்தபடி அவர் அலுவல் ஆற்றிய வண்டியிலேயே பயணச் சீட்டோடு பயணம் செய்திருக்கிறார்கள். அப்போது அவர்களும் வடக்கு நோக்கித்தான் போய்க்கொண்டிருந்தார்கள் கூலி வேலை தேடிக்கொண்டு. அன்று அவர்கள் அணிந்திருந்த அந்த உடை அவ்வளவு கந்தலாக இல்லை. நடப்பதற்குக்கூட ஆற்றலற்று இப்படித் தடுமாறுகின்ற நிலையும் அன்று அவர்கள்பால் இல்லை. உடலிலே வலிவும் உள்ளத்தில் தெம்பும் குடிகொண்டிருந்தன.

நாலைந்து நாட்களுக்கு முன்னர் தான், அதன் பிறகு அந்த நாலைந்துபேரும் இந்தப் பரிசோதகரின் கண்ணிற்பட்டனர்—உருவத்தில், நிலையில், பேச்சில், நடத்தையில், ஆக எல்லாவற்றிலும் பெரியதொரு மாற்றத்தோடு.

அன்றுபோல் இன்று அவர்களிடம் பயணச் சீட்டு இல்லை. அதனால் பரிசோதகரைக் கண்டதும் அவர்கள் அடக்க ஒடுக்கங் காட்டி எழுந்து நின்றுகொண்டனர். வழக்கப்படி வருகின்ற கோபம் பரிசோதகருக்கு வராமலிருக்குமா? அவர் அவர்களைப் பார்த்து ஏதேதோ கூறிவிட்டு, அடுத்த நிலையத்தில் இறங்கிவிட வேண்டுமென்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டு, அங்கொரு இருக்கையில் அமர்ந்தார். வேறு ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தார்.

பக்கத்திலிருந்த யாரோ ஒருவர் அந்த உருவங்களைப் பார்த்து "நடையில் போய் உட்கார்ந்து கொள்ளுங்கள்!" என்றார். அவர் அவர்களைப் பார்த்து இரக்கங் காட்டி அப்படிச் சொன்னாரோ, அல்லது அவர்கள் அங்கே நிற்பது தம் கண்களை உருத்துகின்றது என்பதற்காகச் சொன்னாரோ, அது அவருக்குத்தான் தெரியும். அவ்வேளை அடுத்திருந்த மற்றொருவர், "இப்படி எல்லாம் பயணச் சீட்டு இல்லாமல் நீங்கள் வண்டியிற் பயணம் செய்யாவிட்டால் என்ன? மானம், மரியாதையோடு ஒரே ஊரிலிருந்து வாழக் கூடாது?" என்று கேட்டார். அவர் அந்தக் காரமான சொற்களை உள்ளத்தின் அடித்தளத்திலிருந்தே எடுத்தெறிந்தார்.

"ஊர் ஊராகப் போகவேண்டும்; இப்படி அவமானப்படவேண்டும் என்று எங்களுக்கு ஆசை இல்லை ஐயா. இப்போது நாங்கள் வடக்கே இருந்து வருகிறோம். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னே இங்கிருந்து போனவர்கள் பிழைப்புக்காக." என்று அந்த உருவங்களின் தலைமை உருவமான தாய் மறுமொழி கூறினாள்.

"பிழைக்கப்போனவர்கள் ஏன் இப்படிப் பயணச் சீட்டுக்கூட வாங்காமல் வருகிறீர்கள்?"

"எங்கள் கோலத்தைப் பாருங்கள். பணமிருந்தால் சீட்டு வாங்காமல் வருவோமா?-போன இடத்தில் வேலை என்னவோ கிடைத்தது. ஆனால் மிகவும் கடுமையான வருத்தம் நிறைந்த வேலை. கிடைத்த கூலியோ மிகவும் குறைவு. அது உணவுக்கே போதவில்லை. குளிர் வேறு அங்கு மிகுதி. அதனால் உடல் நலனும் கெட்டுவிட்டது. என்றாலும் எப்படியோ உழைத்தோம். ஆனால் வேலை நீண்ட நாள் கிடைக்கவில்லை. திடீரென்று ஒரு நாள் வேலை நின்றுவிட்டது. வேறு பிழைப்புக்கும் வழி இல்லாமற் போய்விட்டது,"

"அங்கு என்ன வேலை செய்தீர்கள்?"

"ஒரு பெரிய தொழிற்சாலை கட்டிக்கொண்டிருந்தார்கள். அங்குதான் உழைத்து வந்தோம். கட்டிடம் கட்டியானதும் எங்களை எல்லாம் போகச்சொல்லிவிட்டார்கள். கையில் பணம் இல்லை. வயிற்றுப் பாட்டிற்கும் வழி இல்லை. கடந்த மூன்று நாட்களாக வெறுந் தண்ணீர்தான் எங்கள் உணவு."

கேள்வி கேட்டவர் மேலே பேசவில்லை. வண்டி நின்றது.

பரிசோதகர் கீழே இறங்கிப் போனார். இறங்கும்போது அந்த சீட்டில்லாப் பயணக்காரர்களை அவர் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அவர் மறந்துவிட்டார் போலும். அங்கே சந்தடியும், நெருக்கடியும் பெருகிச் சூழ்ந்தன. அவர்கள் இறங்கிக்கொண்டிருப்பார்களோ என்னவோ!

மறுபடியும் நான்கு நாட்களுக்குப் பிறகு, இன்று அவர்களைக் கண்டார் பரிசோதகர். அவர்களை நிலையத்திற்கு வெளியே கொண்டுபோய்விட்டு வந்த பிறகு தான் அவர்கள்மீது அவர் கொண்டிருந்த ஆத்திரம் மாறி இரக்கம் வந்தது போலும். பாவம், அவர் தான் என்ன செய்வார்? தம் கடமையைச் சரிவர நிறைவேற்ற வேண்டுமே!

"ஐயோ உலகமே, என் இனம் இப்படியா துன்புற்று, துயருழந்து தெருவில் நிற்கும் அருகதையும் இல்லாமல் சீரழிந்து திரியவேண்டும்!" என்று அவர் தமக்குள் கூறிக்கொண்டாரோ என்னவோ, நீண்ட பெருமூச்சொன்று அவரிடமிருந்து வெளிப்பட்டது.

இரயில் கூவியது. உடனே நகரத் தொடங்கியது. பரிசோதகர் ஓடிப்போய் பெட்டியொன்றில் தாவி ஏறிக்கொண்டார்.

"அரே, டிக்கட்வாலா! நம்பள் பணம் குடுக்குறான் இல்லே, நிம்பள் நகை விக்கறான்!" என்று மார்வாடி அடுத்த பெட்டியிலிருந்து தலையை வெளியே நீட்டி உரக்கக் கூவியது அந்தப் பரிசோதகர் காதில் விழாமல் இல்லை.

★

இங்கிலாந்தில் ஏப்ரல் 23!

பொ. செல்வநாதன்

"டம் டமார்...டமார்...டமார்...." முரசொலித்தது இப்படி. ஒலி கிளம்பிய திசைநோக்கி விரைந்தனர் மக்கள்; குழுமினர் அங்கே. 'இதனால் எல்லோருக்கும் அறிவிப்பது என்னவென்றால், இந்நகரத்திலுள்ள வாலிபப் பெண்கள் யாவரும் அவர் அவர்களுக்குக் குறிக்கப்பட்ட முறைப்படி ஒரு நாளுக்கு ஒருவராக அந்தப் பயங்கரமிருகத்துக்கு ஆகாரமாக அனுப்பப்பட வேண்டும். அப்படி அனுப்பத் தவறும் குடும்பத்தினருக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்படும். இது மகாராசாவின் மாறாத கட்டளை...! டம்டமார்...டம்டமார் ...டம்டமார்..."

என்ன இது ஏதோ பாட்டிக் கதை பகர்வதாக இருக்கின்றதே என்று எண்ண நேரும். எனினும் இப்பாரிலே நிகழ்ந்த பரிதாபத்திற்குரிய கதைதான இது.

இங்கிலாந்து நாட்டின் கிழக்கிலுள்ள நாடுகளொன்றில் பல்லாண்டுகட்குமுன் பயங்கரக் கானகம் ஒன்றிருந்தது. அக்கானகத்தினை அபூர்வ பிராணியொன்று அடைக்கலமாகக் கொண்டிருந்தது. வனத்தின் பயங்கரத்திற்கேற்றவாறு அவ்விலங்கும் பயங்கரமானதாய் இருந்தது.

அவ்விலங்கின் தோல், பித்தளையைப்போல் கடினமானது. அது விடமிவிடும் மூச்சோ தீ அனல் போன்றது. தலை: மலைப்பாம்பின் தலையைப்போல மிகப் பெரியது. வாயில் கோரமான கூரியபற்கள் இருந்தன. உடல்: ஒணானின் உடலைப்போன்று மிகப் பெரியது. கால்களோ தவளையின் கால்கள்போல் நூறு மடங்கு பெரியனவாயிருக்கும். உடலின் இருபக்கங்களிலும் பந்தடிக்கும் கோல்போன்ற பெருத்த அவயவங்கள் இறக்கைபோல் இருந்தன. அது நீரில் போகும்போது அவ்வுறுப்புக்கள் நீந்தத் துணை புரிந்துவந்தன. மாபெரும் வாலும் அதற்கிருந்தது. அதன் உடலெல்லாம் மீன்செதிள் போன்ற செதிள்கள் மிகப்பெரியனவாக நிறைந்திருந்தன. அவ்வனத்தினிடையே பெரிய நீர்த்தடாகம் ஒன்றிருந்தது. அந்நீர் நிலையிலும் அம்மிருகம் வசித்துவந்ததுண்டு. இவ்வளவு அதிசயமிக்க அவ்விலங்கினை ஆங்கிலத்தில் சால் இறக்கை நாகம் (டிராகன்) என்று கூறுவர். அம்மிருகத்ன்தப்போன்ற விலங்குகளைப்பற்றிய குறிப்புகளைச் சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் கூறியுள்ளனர் — திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள்கூடத் தமதருமைச் செல்விக்கு வரைந்துள்ள கடிதத்தில், இங்கே கூறப்படும் விலங்கினைப்போன்ற பிராணியைப்பற்றிக் கூறியுள்ளார். அது நூல்வடிவில் வந்துள்ளதைப் பலர் அறிவர்.

அக்கொடிய காட்டின் அருகிலே அரியதோர் பெரிய நகரம் இருந்தது. அந்நகரைச் சுற்றிலும் உயரமிக்க மதில்கள் கட்டப்பட்டிருந்தன. காட்டுப்பக்கமாக இருந்த வாசல் வழியாகச் செல்லும் மக்களும் மாடு ஆடுகளும் திரும்ப உயிருடன் நகரினுள் செல்லல் அரிது. தூரத்திலுள்ள பிராணியையும் வெகு வேகமாகத் தாவித் தாவி ஓடிப் பிடித்துத் தன் கோரப் பற்களால் கடித்து விழுங்கிவிடும். மனித வாடை பட்டாலோ அம்மிருகத்துக்குப் புதிய பலம் பிறந்துவிடும். விரைந்தோடிப்போய்ப் பிடிக்கும். நழுவமுனைந்தால் நழுவமுடியாது. ஐயோ அக்கோரப்பிடியிலிருந்து தப்பமுடியுமா? மேலும் நரரின் நாற்றமே நல்லமுதாயிற்றே அதற்கு! தன் தடித்த பெரும் வாலால் சுழற்றி அழுத்திக்கொண்டு வாயால் கௌவிக்கடித்துப் பின்விழுங்கிவிடும்.

இவ்வண்ணமாய் ஒவ்வொரு நாளிலும் அழிக்கப்பட்டுப்போகும் மக்களும் மாடு ஆடுகளும் கொஞ்சமல்ல! ஒவ்வொரு நாளிலும், தங்கள் தங்கமேனித் தம்பி தங்கையரும், தம் தங்கக்குணம் வாய்ந்த தாய் தந்தையரும், பாழும் மிருகத்திற்குப் பலியானதைக் குறித்துக் குமுறியழும் கூக்குரல் நகரெங்கும்—கேட்டுக்கொண்டிருக்கும்.

மாந்தர் பலர் பலதடவைகளில் கூடிப் பல ஆலோசனைகள் புரிந்தனர்--அவ்விலங்கினின்று தப்புவதற்கு. அம்மக்கள் கூடிக் கூடி ஆலோசித்த நேரமெல்லாம் விருதாவாயிற்று. அம்மாநகரத்து மணிமுடிவேந்தன்! மாபராக்கிரமசாலி! அம்மன்னவனே அம்மிருகம் கத்துவதைக் கேட்டால் குலைநடுங்க ஓடிவிடுவான். அவனே அப்படியெனில், அவன் நாட்டு மக்களும், அவன்தன் பரிவாரங்களும் எத்தகையவர் என்பது கூறாமலே புலப்படுதல்கூடும்.

மன்னவனும் மற்றவர்களும் குழம்பிக்கொண்டிருக்கும் வேளையில் சில 'மாபுத்திசாலிகள்' ஆலோசனை மண்டபத்தையணுகி

அரசனிடம், அந்த அகோர மிருகத்தினிடமிருந்து மன்னனும் மக்களும் தப்புவதற்குரிய அரிய உபாயம் ஒன்றைப் புகன்றனர். அதைச் செவியேற்றிய செம்மல்! செங்கதிரோனையொத்த வீரம் கொண்ட வேந்தன்! மக்களிடம் தோல்விகாணுத்திரன்! மனமகிழ்ந்தான் — முகம்மலர்ந்தது. மந்திரி சபையைக் கூட்டினன்-மந்திராலோசனையைக் கூறினன்—மதியூக மந்திரிகளும் மகிழ்ந்தனர். 'செருக்குப் பிடித்த மிருகப் பிறவியை விலக்கி, மக்களும் நாமும் தப்புவதற்கு இதுவே சிறப்பான யோசனை! இதுவே சீர்மிகும் மார்க்கம்' எனப் பகர்ந்தனர். ஆலோசனை கூறிய வர்களையும் 'ஆற்றெண்ணு' வீரம் வாய்ந்த அரசனையும் புகழ்ந்து பாராட்டினர். உடனே அவ்வாலோசனை சட்டமாக்கப்பட்டது. அந்தச் சட்டம் அமுலாக விளம்பரம் செய்யப்பட்டது. அந்த விளம்பரம் தான் முதலிலே குறிப்பிடப்பட்டிருப்பது.

'சீச்சீ... இந்த விளம்பரமா! மக்களைப் பிடித்துண்ணும் மிருகத்தின் நாக்கையறுத்து, அதன் நாடி நரம்புகளைப் பிய்த்தெறியத் திராணியில்லாத அரசன் இந்த விளம்பரத்தை வெளியிட்டானா? என்று நாம் கேட்போம். ஆனால் அவன் ....!

விளம்பரம் செய்யப்பட்ட அன்று முதல் ஒவ்வொரு நாட் காலையிலும் ஒரு நாரிமணி நகரத்துக்கு வெளியே அனுப்பப்படுவாள். அக்கோர மிருகம் தன் கூரிய பற்களால் கிழித்துத் தன் ஈன நாக்கினால் சுவைத்து இனிய உணவாக விழுங்கும். பின் திருப்தியோடு வனத்தினிடையே செல்லும். இப்படியே அந்நகரத்துப் பல வனிதாமணிகளும் அம்மாகொடிய விலங்குக்கு இரையாக்கப்பட்டார்கள்.

நகரத்து மதிற் சுவரின்மேல் ஒவ்வொரு காலையிலும் மக்கள் ஏறி, அந்த இளமங்கையர் கூவுவதையும் அக்கொடும் விலங்கு அவர்களைக் கொன்று கிழித்துத் தின்பதையும் கண்டு மகிழ்வார்கள்!

'இது என்ன வெட்கம் கெட்டதனம்! மகாகோழைத்தனம்! அந்தப் பெண்ணின் உற்றார் கதறிக் கொண்டிருக்கும்போது இவர்கள் கண்டுசிரிப்பதா! ஏன் அத்தனை ஆடவர்களும் சேர்ந்து அந்த ஆணவம் பிடித்த மிருகத்தை ஆளுக்கோர் கத்தியைக் கொண்டு குத்தி, அல்லது ஆளுக்கோர் தடிகொண்டு அடித்து, அல்லது ஆளுக்கோர் கல்லெடுத்து எறிந்து கொன்றுவிடக் கூடாதா? என்று நாம் கேட்போம். ஆனால் அவர்கள்! இறுதியிலே அந்த நகரத்தின் அரசனுடைய அரும் குமரி, அவனுடைய ஒரே மகள்—எழில் அரசி — அழகிற் சிறந்த இன்பவல்லி, ஆடவர் மயங்கும் நளின நடையுடையாள், பதினாறு வயது வாய்ந்த இளமங்கை, இளவரசி சாப்ரா அக் கொடிய விலங்கின் பிடிக்குப்போய் அதன் கோரப் பசிக்காளாகும் நாள் வந்தது. 'சாப்ரா! என் கண்ணே! உன்னை மிருகத்துக்கு அரிய அடிசிலாக அளித்துவிட்டு எப்படி வாழ்வேனடி? ஐயோ மகளே உன்னை இப்படிப்பட்ட ஆரணங்காக ஆக்க அரும்பாடு பட்டு வளர்த்தேனடி! ஐயோ சாப்ரா! ஒரே புதல்வியையும் ஏதும் கெட்ட பிராணிக்கு இரையாக்கவா வேண்டும்... இல்லை...... நான் விடமாட்டேன் உன்னை; நகரத்துக்கு வெளியே விடவேமாட்டேன்...? என்று அழுதாள் சாப்ராவின் அன்னை.

அரசனோ அகக் குமுறலுடன் மக்களை வேண்டினன்: 'இவள் எங்கள் ஒரே புதல்வியல்லவா? எனக்குப் பின் நம் நாட்டை ஆளும் பொறுப்பு இவள்மேல் அல்லவா இருக்கிறது? எனதன்பார்ந்த குடிமக்களே, இவளை அக்கொடிய விலங்குக்கு இரையாக்காமல் காத்திடுங்கள். பிற்காலத்தில் இவள் நம் சீர்மிகும் நாட்டைச் சிறப்புடன் ஆளுவாள்' என்றனன்.

மக்களோ மறுத்துவிட்டனர். ஆளும் பொறுப்பினை அதன்பின் பார்ப்போம். இப்போது அரசன் மகளுக்கு வந்த முறைப்படி அவள் நகரத்துக்கு வெளியே தள்ளப்பட வேண்டும். மிருகத்துக்கு ஆகாரமாக வேண்டும். எங்கள் அரும் குணவதிகள், பைங்கிளியொத்தப் பெண்மணிகள், ஆயிரமாயிரம் பேர்களை அந்த ஆரணியத்து அகோர விலங்குக்கு ஆகாரமாகப் பறிகொடுத்துப் பாழாக்கிவிட்டோம். அரச குமாரியின் முறை வந்திடும் இவ்வேளையில் இவர்கள் அங்கலாய்த்து மறுப்பது அநியாயம். அவளை வெளியே விட்டாகவேண்டும் என நெடுங்கூச்சலுடன் நவின்றனர் அவர்கள். என்ன செய்வர் அரச தம்பதிகள்! மனக் கலக்கத்தினால் செயலற்றிருந்தாள் அரசி. அரசனோ 'சரி அப்படியானால் நானே அவ்விலங்கின் இரையாகி விடுகின்றேன்- என் மகளைக் காப்பாற்றுங்கள்? எனக் கூறினன். 'இல்லை அரசகுமாரியின் முறைக்கு அவளேதான் அவ்விலங்கால்கொல்லப்படவேண்டும்; அரசகுமாரியே கொல்லப்பட வேண்டும்? என்றனர் மக்கள்.

'தந்தையீர், தயங்கவேண்டாம். நானே அவ்விலங்குக்கு இரையாவேன். என்னை அனுப்புங்கள். எனக்கு வரும் கேட்டிற்கு நீவிர் ஆளாவதா—ஐயோ வேண்டாம். நானே அம்மிருகத்திற்கு உணவாவேன்' என்று தைரியத்துடன் கூறினாள் மன்னன் மகள் சாப்ரா.

'சரி மகளே, வேறு என்ன செய்வேன்? போமகளே — எந்த வாயால் உன்னை அன்பு மொழியால் அழைத்துப் புகழ்ந்து வந்தேனோ, அதே வாயால் இன்று விலங்குக்கு இரையாகப்போ என்று கூறுகிறேன் மகளே சாப்ரா ஐயோ, ஐயோ!' என்றழுதான் அரசன்.

சாப்ராவுக்கு வெண்ணுடை உடுத்தினர். அவள் தலையை ரோஜா மலர்களால் அலங்கரித்தனர். அவளுடைய அன்னையும், தந்தையும், உற்றாரும் புலம்பிக் கொண்டே அவளை அழைத்து வந்தனர். வீதிகள்தோறும் பெரும் கூட்டம் கூடிவந்தது. நகரத்தின் கானகவாசல் வழியே வெளியே அனுப்பினர் அவளை. ஓர் போர்ச் சேவகன் கட்டுவதற்கென்று நாட்டப்பட்டிருந்த பெரிய முளையில் அவளை இறுக்கமாகப் பெரும் கயிற்றால் வேகமாகக் கட்டிவிட்டு விரைந்து வந்து நகரத்து உட்புறம் போய் வாசலின் பெருங் கதவைச் சாத்திவிட்டான்.

வழக்கம்போல் மக்கள் மதிற்சுவரின்மேல் ஏறிப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

கயிற்றால் கட்டப்பட்ட கன்னிப் பெண் சாப்ரா தன் கொடிய நிலையை எண்ணி எண்ணிக் கண்களில் மாலை மாலையாக நீர் வடிய மௌன அழுகை புரிந்து கொண்டிருந்தாள். கடந்துபோன தன் வாழ்நாளில் ஓடியாடித் தாதியருடன் கூடியாடிக் கும்மாளம் போட்ட

தெல்லாம் நினைவுக்கு வர, நவில வொண்ணா நெடுந்துயரில் மூழ்கியிருந்தாள். எதிர்கால வாழ்வில் ஏற்றம் பெறும் இன்பத்திலே எழில்மிகும் ஆடவனொருவனுடன் குலவிக் கொண்டிருக்கத் தீட்டிய திட்டங்களையும் உள்ள விழியின் முன் கொணர்ந்து உணர்வற்றவள் போல் கண் பிதுங்கக் கண்டு கலங்கிக்கொண்டிருந்தாள்.

அவ்வேளையிலே அவளின் எண்ண அலைகளைத் தடுக்கும் கரையைப்போல் 'டக்டக்...டக்டக்' என்ற சத்தம் விரைவாகக் கேட்டது. ஒலிவந்த பக்கம் ஓட்டினாள் பார்வையை. ஓர் மாவீரன் படையுடை தரித்து வெண்பரியொன்றில் ஏறி அவ்வழியே வந்து கொண்டிருந்தான். அவ்வீரனின் உடை இரும்புத்தகடுகளாலானது. தலையில் இரும்பு மூடி தரித்தும், இடது கையால் பெரிய மார்க்கவசம் பிடித்தும், குதிரை வாரையும் அதே கையால் பிடித்துக் கொண்டிருந்தான். வலது கையால் பெரிய நீளமான ஈட்டியைப் பிடித்தவனாகவுமிருந்தான்.

மக்கள் மதிற்சுவரில் ஏறி நின்று கூச்சல்போட்டுக் கொண்டிருப்பதையும், அரும் குமரியொருத்தி ஆதரவற்றவளாக, அனாதையாகக் கட்டப்பட்டிருக்கின்றதனையும் கண்டு அக் கன்னிகையிடம் சென்றான். காரணத்தை வினவினான். கட்டழகி கூறினாள் சில வார்த்தைகளில் "அதிருக்கட்டும் அன்பரே, அந்த அகோர மிருகம் வருவதற்குள் போய்விடும் — விரைவில்— போய்விடும். நான்தான் கொல்லப்படவிருப்பவள் எனின், நீவிர் ஏன் அவ்விலங்கால் கொல்லப்பட வேண்டும்? மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்—போய்விடும்"— என்றனள். "இது என்ன பேதமை. ஒரு பெண்ணைப் பியத்துத் தின்னும் பிராணியைப் பதுங்கியிருந்து பார்க்கவா கூடியுள்ளனர் அக் கயவர்கள்—அக் கொடிய விலங்கைக் கொல்லும் வகையின்றி?" என்று கூறியவாறே குதிரையை நிறுத்தி, ஈட்டியைத் தரையில் ஊன்றிவிட்டு உடைவாளை எடுத்து அவ்விளமங்கையை உறுத்தும் தளையை அறுத்தெறிந்தான். பின்னர் வாளை உறையிலிட்டு முன்போல் ஈட்டியைக் கையில் பிடித்துக்கொண்டான். சாப்ரா திகைத்தாள்! அவள் விடுபட்டாள் எனினும், விறைத்தவள் போல் நின்றாள்!

அப்போது 'உர்ர்...அர்ர்......' என்னும் கோரச் சத்தமும் 'சலசல ...பலபல...பட்பட்' என்று தாவரங்கள் அசைவதால் ஏற்படும் ஒலியும் கேட்டது. ஆம் அவ் விலங்கு தன் வருகையைத்தான அவ்வொலிகளின் மூலம் உணர்த்தியது. வீரன் வெகுளிமிகக்கொண்டான். என்றுமில்லாத்திறம் தேங்கி வந்துவிட்டது அவனுக்கு. விலங்கும் வழக்கத்திற்கு மாறாக இருப்பதைக் கண்டு கடுஞ்சினம் கொண்டது. கோர ஒலி கிளப்பிக் கொண்டு வேகமாய் அவ்வீரனை நெருங்கிற்று. அவன் வீராவேசம் கொண்டான் என்பதை, அவனுடைய வெண் குதிரை அவ்விகார விலங்கின் வருகையைக் கண்டு மிரளும்போது அதனை அடக்கி நிறுத்துவதனால் புலப்பட்டது. அவ்விலங்கு அவனை அறைந்து கொல்லத் தாவித் தாவி விரைவாக வந்தது. வீரன் பாய்ச்சினான் ஈட்டியை அதன் முதுகின் மேல்— தூரத்திலிருந்தே, விகார மிருகம் கடும் கூச்சல் ஒன்றிட்டது. இரு பின்னங்கால்களாலும் வாலாலும் தரையில் நின்று, முன்னங்கால்களால் அவன்மேல் பாய முனைந்தது. அதற்குள் தன் நீண்ட ஈட்டியின் பின் முனையைப் பிடித்து இழுத்து மறுபடியும் அதன் மார்புப் பக்கம் படும்படி குத்தினான். கடுங்கோபம் கொண்ட விலங்கு கடூர சத்தம்போட்டுத் தன் இறக்கை போன்ற அவயங்களை வேகமாக மேலும் கீழும் ஆட்டியவாறே தன் கோரவாயைத் திறந்து கொண்டு பாயவந்தது அவன்மேல். அவனோ தன் ஈட்டியை இழுத்துக் கொண்டு, குதிரையைத் தள்ளிக் கொண்டு தூரமாகச் சென்றான். இப்படியே அது கிட்ட வரும் போது எட்டப்போயும், அது எட்ட இருக்கும்போது அதனை ஈட்டியால் முட்டப்போயும், மார்பிலும் பக்கங்களிலும் பல குத்துகள் விட்டுப் பின்சாய்த்தே விட்டான் மண்ணில் அம்மிருகத்தை! அதன் வாயிலேயே பாய்ச்சவேண்டும் ஈட்டியை என்று சமயம் பார்த்திருந்த அவனுக்கு, அவ்விலங்கு வேதனையோடு தன் விகார வாயை முழுதுமாகத் திறந்தபோதுதான் வாய்ப்புக் கிடைத்தது. பாய்ச்சினான் ஈட்டியை அதன் வாய்க்குள்ளே. வாயில் நுழைந்த ஈட்டி முனை அதன் இருதயத்தைக் கிழித்துவிட்டு அதன் மார்புப் பக்கம் வெளியே எட்டிப்பார்த்தது.

ஈட்டியை இழுத்துக்கொண்டான் அப் பெருவீரன். அம்மிருகமும் தன் மூச்சைப் பெருமூச்சாக இழுத்து இறுதியாக விட்டுவிட்டது! ஆம அவ்விழிந்த மிருகம் அப்போதுதான் தன் ஆவியைத் துறந்தது!

வெற்றிப் பெருமூச்சு விட்டான் வீரன்.

இதுவரையில் 'அவ்வீரனை மிருகம் கொல்லப்போவதைக் காணக்கூடாது' என்ற நினைவினளாகக் காதுகளைத் தன் இரு கைகளாலும் மூடிக்கொண்டு வேறு பக்கமாகவே திரும்பிக்கொண்டிருந்தாள் சாப்ரா.

மிருகத்தின் ஒலி ஓய்ந்திருப்பதையும், அவ்வீரனின் வெற்றிப் பெருமூச்சு ஒலியும், தொடர்ந்து சுவரின்மேல் உள்ள மக்கள் போடும் மகிழ்ச்சி ஆர்ப்பாட்டமும் கேட்டு மெதுவாகத் திரும்பிப் பார்த்தாள் அவள். 'பயப்படாதே பெண்ணே, மிருகத்தின் மூச்சு ஒடுங்கிவிட்டது. இனி ஒருவருக்கும் அதனால் ஆபத்தில்லை' என்றான் அவன். அன்புப் பெருக்காலும், மிக்க மகிழ்ச்சியாலும் பதிலொன்றும் கூறவியலாத வனிதை, அகலத் திறந்த விழிகளால் நோக்கினாள் அவனை. 'சரி வா பெற்றோரிடம் போவாய். எனக்கு நேரமாகிறது. நான் உன்னை அவர்களிடம் ஒப்படைத்து விட்டுப் போகவேண்டும்' என்றான் அவன்.

அதற்குள் அரசனும் அவன் ஆணைக்குட்பட்டவர்களும் ஓடிவந்தார்கள் அவ்வீரனைப் பாராட்ட. பேரொலியோடு முழக்கமிட்டுப் புகழ்ந்தனர். தம் மகளின் 'நற்கால'த்தை எண்ணி எண்ணி அவளைத் தழுவி முத்தமிட்டனர் அரச தம்பதிகள். அறுசுவை விருந்துண்டு ஏகுமாறு வீரனை வேண்டிக் கொண்டனர். அவனும் சம்மதித்தான். அரச குமாரியையும் வீரனையும் அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர். வீரனின் விருப்பமிருந்தால் தம் வனிதாமணியை இருபத்து இரண்டு பிராயம் வாய்ந்த அவனுக்கே வாழ்க்கைத் துணைவியாக்கி வைப்பதாக அறிவித்தான் அரசன்.

அழகு மிகும் வனிதையை, கட்டிளங் கன்னியை வலியக் கொடுக்கும் அவர்கள் விருப்பத்தை ஏற்காமல் இருக்க முடியுமா அவ்வீரக் காளையால்? அவனும் ஒப்புக்

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

கொண்டான். இளவரசி சாப்ராவுக்கும் அவ்வீரனுக்கும் வாழ்க்கைத் துணை ஒப்பந்த விழா வெகு விமரிசையாய் நிகழ்ந்தது.

சின்னாட்களில் மணப்பெண் சாப்ராவுடன், மணமகனான அவ்வீரன் தன் நாடாம் இங்கிலாந்துக்குச் சென்றான்.

ஆம், அவ்வீரனுக்குரிய நாடு அவ்வாங்கில நாடுதான், அவ்வீரர்தான் புனித ஜார்ஜ் ஆவார். புனித ஜார்ஜ் புரிந்த பெரும் தீரச் செயலைக் கேட்ட பிரிட்டன் மக்கள் மிக்க வியந்தனர். அவருக்கு மாபெரும் பரிசாக வந்த மன்னன் மகள் சாப்ராவைக் கண்டு மகிழ்ந்தனர். அரசாங்கமும் மக்களும் ஆர்வத்தோடு பாராட்டினர் அவர்களை.

ஜார்ஜ், மக்களுக்கு அரும்பெரும் பணிகளைப் புரிந்து வந்தவர். அயர்வுறாது அல்லும் பகலும் மக்களின் அரிய சேவையே தம் மூச்சாகக்கொண்டிருந்தவர். போராற்றலுடன் பிறர்க்கெனவே வாழ்ந்தவர். நன்மையே புரிந்த அவருக்கு நல் ஆரமாகத்தான் 'புனித' என்ற பட்டத்தைச் சூட்டிப் 'புனித ஜார்ஜ்' என்று பேரன்புடனும் பெரு மதிப்புடனும் அழைத்து வந்தனர் அவர் தம் நாட்டுமக்கள்.

இத்தகைய பண்புகள் நிரம்பப் பெற்ற அப்பெருவீரர் தம் பணியை மிகுதியாகப் படையில் சேர்ந்து செய்துவந்தார். புனித நாட்டில், (பாலஸ்தீனத்தில்) நடந்த ஓர் போரை முடித்துக்கொண்டு தான், அக்கோர விலங்கிருந்த கானகத்தின் ஓரத்தில் செல்லும் வழியே வரும்போதுதான், விலங்கைக் கொன்று வனிதையையடைந்து அந்த நாட்டு மக்களுக்கும் நல்லுணர்வூட்டினார்.

அம்மாபெரும் வீரர் மிக்க நல்லுள்ளம் படைத்தவர். நெடுநாள் புரிந்த சேவைக்குப்பின் தம் இறுதிப் பயணத்தை முடித்துக்கொண்டு உயிர் நீத்தார். உற்றாரும் உற்ற தன் துணைவியும் ஆற்றொணாத் துயரத்தில் ஆழ்ந்தனர். அரிய தம் நாட்டு மக்களும் பெருந்துயரில் மூழ்கினர். ஆன்றோரும், அரசாங்கமும், மக்களும் ஆண்டுதோறும் அப்பெரும் தியாகியாம் புனித ஜார்ஜின் நினைவு நாள் கொண்டாட முடிவு செய்தனர். அங்ஙனமே ஆண்டுதோறும் ஏப்ரல் இருபத்து மூன்றும் நாளில் அப்பெரும் தீரனை நினைந்து விழா நிகழ்த்துவர். அன்றைய தினமே அம்மேன்மை மிக்கவனின் துணைவியையும் நினைக்கும் பொருட்டு அவள் அக்கோர விலங்கின் இரையாகிப் போயிருக்கவேண்டிய அந்த நாளில் அவள் அணிந்திருந்த அரும் மலர் ரோஜா என்பதாலும், அம்மலர் ஆங்கில நாட்டு மலர் என்பதினாலும், அந்நாட்டுப் பெண் மக்கள் யாவரும் ரோஜா மலரை அன்று அணிந்து கொள்வர். புனித ஜார்ஜின் தினமாகிய ஏப்ரல் இருபத்துமூன்றில் ஒவ்வொரு மகளிரும் எப்படியாவது ஒரு ரோஜா மலரையாவது அணிந்துகொள்வர். இந்த நினைவு நாள் விழா ஆண்டுதோறும் இடையூறின்றி ஏப்ரல் இருபத்து மூன்றில் நிகழ்ந்து வருகின்றது இதுகாறும்,

அதுமட்டுமன்று, அவ்வீரர், அக்கோர விலங்கைக் கொன்ற காட்சியைத் தங்கள் நாட்டு நாணயங்களிலும் பதியச் செய்துள்ளனர் அம்மக்கள். அக் காட்சியை ஐந்து ஷில்லிங்கு நாணயத்தில் நன்றாய்க் காணலாம். நம் நாட்டில் அக் காசுகளை நேரில் காணவியலாதெனினும், அச்சுப் படங்களில் பார்க்க முடியும். ஆயினும் ஐந்து ஷில்லிங்கில் அவ்வீரரின் ஈட்டியை நீளமாகக் காட்டவில்லை.

இங்ஙனம் பேரும் புகழும் எய்திய அவ்வீரர் மாபெரும் தீரச் செயல் புரிந்த தியாகி, வையக வரலாற்றிலே ஒரு இடத்தை ஏற்படுத்திக்கொண்ட அவரை ஆங்கில மக்கள் என்றும் மறத்தல் இயலாதன்றோ!

அன்றைய இந்த நிகழ்ச்சி இன்றும் பொருத்தமாக இருப்பதை, இன்று இங்கு நடைபெறும் ஒரு நிகழ்ச்சி எடுத்துக்காட்டுகின்றது.

இந்திமொழித் திணிப்பைத்தான் குறிப்பிடுகின்றோம். இந்தி மொழி என்னும் விலங்கின் பிடியில் அகப்பட்டுத் தவிக்கும் தமிழ்மொழியையும், தமிழ் மக்களையும் மேற்கூறப்பட்ட சம்பவத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள்.

பிறகு, அந்தக் காலத்து அக்கொடிய விலங்கினை மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்துங்கள். அதன் பின்னர், அந்நாட்டு மன்னன், மக்கள், அவர்தம் மன இயல்பு ஆகியவற்றை எண்ணிப்பாருங்கள்? கடைசியாக அந்த ஜார்ஜ் என்னும் வீரனையும் அவனது ஆற்றலையும் அந்த ஆற்றல் காரணமாக அவன் பெற்ற வெற்றியையும் சேர்த்துப்பாருங்கள் — செயல்படுங்கள்.

பிறகு, அந்நாட்டு மக்கள் ஏப்ரல் இருபத்து மூன்றைக் கொண்டாடுவதுபோல், நாமும் இந்தித் திணிப்பு ஒழிந்த நாளை நினைவு நாளாகக் கொண்டாடும் வாய்ப்பினைப் பெறுவோமாக.

விற்பனையாளர்கட்கு

"திராவிடநாடு" விற்பனையாளர்களில் பெரும்பாலோர், தங்கள் பட்டியல் பாக்கியை உடனுக்குடன் அனுப்பாது காலதாமதம் செய்வது பெரிதும் வருந்தத்தக்கது.

இனி, ஒவ்வொரு மாதமும் பட்டியல் கிடைத்த ஒரு வாரத்துக்குள் அல்லது 5-ம் தேதிக்குள் பாக்கி அனுப்பாதவர்களுக்குப் பத்திரிகை அனுப்புவது,

கண்டிப்பாக நிறுத்தப்படும்

என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பொறுப்பாளர்,
"திராவிடநாடு"

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.